www.padippakam.com

# ஒரு படுகொலையின் மொழி



சபாலிங்கம்

14.04.1952 - 01.05.1994

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஒரு படுகொலையின் மொழி

சபாரட்ணம் சபாலிங்கம்
அவர்களின்
நினைவுகள் தாங்கிய நூல்

ஜூலை 1994
வெளியீடு:
சபாலிங்கம் நண்பர்கள் வட்டம்
பாரிஸ், பிரான்ஸ்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சபாரட்ணம் சபாலிங்கம்



தோற்றம்:
வேலணை
14.01.1952

மறைவு:
சார்சேல்
01.05.1994

3, ALLEE PAUL LEATAUD
95200 SARCELLES
FRANCE

படிப்பகம்

## தோழா!

உன்னைப் பிரிய மனமின்றி
உன் சிதை மூண்டு எரியும்வரை
உன் அருகில் இருந்து
கடைசியாகத்தான் நாம் கிளம்பினோம்
வேகமாய் பரவிய தீயில்
நீ சாம்பலாய் போய்விட்டாய்
உன் சாம்பல்
எங்கள் மண்ணின் காற்றோடு
கலந்து போய்விட்டது
என்றும் எம்முடன் இல்லாமற்தான்
நீ போய்விட்டாய்!

ஆனால் தோழா!

நாங்கள்
உன் கனவுகளை
எங்கள் தோள்களில் சுமந்து செல்கிறோம்
உனது வேண்டுதலின்படி
உயரப் பிடித்த கொடிகளுடன்
வெகுதூர ஒளியை நோக்கி
நாம் வேகமாக! மிகவேகமாக!
முன்னேறுகிறோம் தோழா
புரிகிறதா உனக்கு!
உன் கனவுகள்
அவை அழியாது.

- செழியன்

www.padippakam.com

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
பாரிஸ் நகரில்
இலங்கைத் தமிழர் ஒருவர்
இரத்தம் சிந்தியிருக்கிறார்.
வழக்கம்போலவே
உரிமை கோரப்படாத கொலை !

இங்கிருந்து சுதந்திரமாக
எழுதவும், வெளியிடவும்
துப்பாக்கிகள் தடை என்று
தூரதேசங்களுக்கு சென்றவர்களை
அங்கும் -
துப்பாக்கிள் துரத்துகின்றன.

ஒரு கொலை என்பது -
அப்படி ஒன்றும் பெரிய விசயமல்ல
என்பது மாதிரியான -
உணர்ச்சி மரத்துப் போன
ஒரு நிலை-
எமக்குள் ஏற்பட்டு வருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

எல்லாவற்றையுமே மறந்து கொண்டிருக்கிறோம்.
மனித உயிரின் பெறுமதியை;
மனிதாபிமானத்தை;
மனம் திறந்து பேசும் வெளிப்படைத்தன்மையை;
இப்படி. . . . . இப்படியாக
மறக்கக்கூடாதவற்றை மறந்தும்
இழக்கக்கூடாதவற்றை இழந்தும்
மறக்கவும் - இழக்கவும்
இனி எதுவுமில்லை என்ற நிலையில்
உணர்ச்சிகளும் உயிர் துறந்து விட்டன.

எனவே சபாலிங்கம்
செத்துப் போனால் என்ன ?
சகோதரன் கொல்லப்பட்டால் என்ன ?
விதியை நொந்து வெந்ததைத் தின்று
வாழும் கதையாகி விட்டது
தமிழ் மக்களின் வாழ்க்கை !

நமக்காகச் சிந்தித்தவர்கள்
வீடு என்ற எல்லை தாண்டி
தன் மக்கள், தன் இனம் என்று
கடமையுணர்வோடு காரியம் செய்தவர்கள்
இரத்தம் சிந்தி, உயிர் விட்டாலும்
என்ன நடந்தது என்று
எட்டிப் பார்க்கக்கூட முடியாதபடி
பயம் ஒரு கயிறாகக் கட்டிப் போடுகிறது.

தினம் தினம் சாவுகள்
தொடரும் சகோதரப் படுகொலைகள்
கேட்டும், அறிந்தும், பார்த்தும்
இவற்றைத் தடுக்கவே முடியாது.
இதுதான் நியதி.
என்ன செய்ய முடியும் எம்மால்
என்று மனம் சலித்துப் போய்
அதுவே - யார் செத்தால் என்ன
என்கிற அலட்சிய உணர்வாகி விட்டது.

அதனால்தான் -
சுதந்திரமான சிந்தனையை மறுக்கும் -
அப்படிச் சிந்திப்பவர்களை அழிக்கும்
ஜனநாயக விரோத கரங்கள்
நம்மவர்கள் மத்தியில் இருந்து
இப்போது கடல் தாண்டியும் நீள்கின்றன.
கண்டிக்க யாரால் முடியும்
என்ற துணிச்சல் கரம் நீளக் காரணமாகிறது.

கொலைக்கு காரணம் புலிகள்



படிப்பகம்

www.padippakam.com

என்று "சபா" குடும்பத்தினர் சொல்கிறார்கள்.
பொதுவாகவும் அப்படித்தான் நம்பப்படுகிறது.

புலிகளை கண்டிப்பதால்
புலிகள் மட்டுமே ஜனநாயகத்தை
மறுப்பவர்கள் என்று அர்த்தமல்ல.

ஜனநாயகம் பேசுகின்ற
தமிழ் அமைப்புக்கள் கூட

தமக்குள்ளும் சரி, வெளியிலும் சரி
ஜனநாயக நடைமுறைகளை
வெளிப்படுத்தியிருக்கின்றனவா - அதன்மூலம்
முன்னுதாரணம் காட்டியிருக்கன்றனவா
என்றால், இல்லை என்பதே பதிலாகிறது.

ஒரு விடயம் மட்டும் உறுதி.
சொந்த மக்களின் ஜனநாயகத்தை
மறுத்துக் கொண்டிருக்கும் எவரும்
அம்மக்களுக்கு
வெளிச்சமான எதிர்காலத்தை
ஏற்படுத்திக் கொடுக்க முடியாது.

ஜனநாயகம் என்றாலே
தமிழ் மக்களுக்கு
அந்நியமான - அநுபவிக்க முடியாத
ஒன்றாகிவிட்டதோ என்னும்
சந்தேகம் நியாயமானதாகி விட்டது.

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்
வாரமலர்
தினமுரசு
மே.29 - ஜூன்.04, 1994



படிப்பகம்

www.padippakam.com



* 1978 ம் ஆண்டு பஸ்தியாம்பிள்ளை கொலையைத் தொடர்ந்து பொலிசாரால் தேடப்பட்ட இளைஞர்களில் பலர் சரணடைந்து கொண்டார்கள். பொலிசாரிடம் சரணடைந்த இளைஞர்களில் மாவை சேனாதிராஜா, புஸ்பராஜா, வண்ணை ஆனந்தன் போன்றவர்களுடன் சபாலிங்கமும் ஒருவர்.



** 1984இல் இலங்கைத் தமிழருக்காக ஜெனிவாவில் குரல் கொடுக்கச் சென்ற தந்தை செல்வநாயகத்தின் மகன் சந்திரஹாசனுடன் சபாலிங்கம்.*



* ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துக் கட்டுப்பாடுகளையும் மீறி ஈழத்தமிழர்களுக்காக முதல் குரல் கொடுத்த திரு. வைகுந்தவாசனுடன் சபாலிங்கம்.



படிப்பகம்

# நீ இல்லாமல் நாங்கள்...

என் ஆருயிரே ! லிங்கா !
நீ எங்கு சென்றாய் ! நாங்கள் மூத்தோர் இருக்க நீ எங்கு சென்றாய் ! நாங்கள் கண்ட கனவுகளென்ன அவை கனவுகளா? ஐயா கண்ட கனவுகள் எங்கே எத்தனை இரவுகள், எத்தனை நாட்கள், எத்தனை வருஷங்கள் ஐயா -ஆருயிர் ஐயா வீட்டு வாசலில் காத்து இருப்பார் -லிங்கமே நீ எங்கு சென்றாய்? அட லிங்கமே வறிய குடும்பத்தில் பிறந்தோம், வளர்ந்தோம், பகிர்ந்தோம், படித்தோம். ஐயாவின் பரம்பரையை பொட்டர் பரம்பரையை நிலை நாட்டினோம்.

வீடு கட்டினோம், வாழ்ந்தோம் நீ வேறு வழியில் சென்றாய் நாங்கள் உனக்கு உறுதுணையாய் நின்றோம். உன்னைத் தொடர்ந்தோம் வெய்யில் என்ன மழை என்ன நீ எங்கு சென்றாலும் நாங்கள் வந்தோம். சிறை என்ன தொடர்ந்தோம் , தொடர்ந்தோம்.

சிறையின் கொடுமையை பொறுத்தாய் தாங்கினாய். அப்பொழுது வராத சாவு இப்பொழுது எங்கிருந்து வந்தது ? தமிழன் என்று பிறந்து குற்றத்திற்காக தமிழ் டாக்டர்கள் இராப்பகலாய் நின்று காப்பாற்றினார்கள். அப்போது வராத சாவு இப்பொழுது வந்ததா?

அடேய் லிங்கன் அன்று தமிழன் என்று பிறந்த குற்றத்திற்காக பொலிஸ்காரன் தம்பி நீ ஓடுவது என்றால் எனது துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டு ஓடு என்றான் அவன் தமிழன்.

அடேய் லிங்கா எத்தனை நாட்கள், இரவுகள் விடுதலை அன்று வரும், இன்று வரும் காத்தாய் அதுவும் வந்தது.

உனக்காகவே பிறந்து வாழ்கின்ற கோமதியை நினைத்தாயா? மகனை நினைத்தாயா ? தம்பியை நினைத்தாயா ? நான் மூத்த அண்ணன், அண்ணி என்று தாரை வார்த்துக் கொடுத்தோமே ! அது இன்றோடு முறிந்தது என்று எங்களை விட்டு வெகுதூரம் சென்று விட்டாயா?

அடே தம்பி! நெஞ்சில் இரத்தம் வழியுதடா எனக்கு ஒரு தம்பி இருக்கிறான் அவன் அப்படி, இப்படி எல்லாம் செய்தான் நன்றாக இருக்கின்றான் என்று பெருமைப்பட்டோமே. அது எங்கேடா ? அட தம்பி எங்கேடா ?

அட தம்பி லிங்கமே நாங்கள் எதை நினைத்து ஆறுதல் படலாம் ? என்ன பதிலை விட்டுச் சென்றாய் உனது மகனுக்கு, உனது மனைவிக்கு, உனது அம்மாவிற்கு, சகோதரங் களுக்கு, பெறா மகன்களுக்கு அட தம்பி லிங்கமே நான் என்ன செய்வேன்.

லிங்கமே நாம் மூத்தவர் என்ன செய்வேன், வாழ்க்கையில் அடி வாரத்துக்கு வந்த நாம் என்ன செய்வோம்.

இரத்தம் வழியுதடா தலை வணங்குகிறேன் நாம் வயதில் பெரியவர் -சிறியவனுக்கு . நாம் வயதில் பெரியவன் என்றாலும் நீ அறிவில் செயலில் பெரியவன்.

வாழ்க தமிழ்
இப்படி ஒரு தம்பி இருந்தான் இப்படி வாழ்ந்தான், போனான் என்று நாம் வாழ்க் கையை ஓட்டுவோம்.
மறுபிறப்பு என்று இருந்தால் மறுபடியும் எனக்கு ஒரு தம்பி பிறப்பான் அவனை லிங்கம் என்று அழைப்பேன்.

அடே தம்பி லிங்கமே இப்போது விடை பெறுகிறேன். மீண்டும் சந்திப்போம்.
தம்பி தம்பி தம்பி.

பாசமுடன்
பெரிய அண்ணன்.

www.padippakam.com

* 1978 ம் ஆண்டு நடைபெற்ற பஸ்தியாம்பிள்ளை குழுவினர் கொலையைத் தொடர்ந்து தேடப்பட்ட தமிழ் இளைஞர்களில் சபாலிங்கமும் ஒருவராவார். பிரபாகரன், மாவை சேனாதிராஜா, புஸ்பராஜா, சத்தியசீலன், சிறிசபாரட்ணம் போன்றவர்களும் மேலேயுள்ள சுவரொட்டியில் ( Wall Poster) காணப்படுகிறார்கள். சுவரொட்டியில் முதலாவதாக பிரபாகரனும் இரண்டாவதாக சபாலிங்கமும் இடம்பெற்றுள்ளார்கள்.

# ත්‍රස්තවාදී ක්‍රියා සම්බන්ධයෙන් අපරාධ පරීක්ෂණ දෙපාර්තමේන්තුව විසින් ප්‍රශ්න කිරීම සඳහා අවශ්‍ය වී ඇති පහත සඳහන් පුද්ගලයින් පිළිබඳව තොරතුරු සපයන අයට අගනා තෑගි පිරිනමනු ලැබේ.

பயங்கரவாத முயற்சிகள் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணை செய்தற் பொருட்டு வேண்டப்படும் பின்வரும் ஆட்கள் தொடர்பான தகவல்களைக் கொடுப்பவர்களுக்கு தாராளமான வெகுமதி அளிக்கப்படும்.

## HANDSOME REVARDS WILL BE OFFERED FOR INFORMATION REGARDING THE FOLLOWING PERSONS WANTED FOR ITERROGATION BY THE C. I. D. IN CONNECTION WITH TERRORIST ACTIVITIES.



VELUPILLAI PRABAKARAN alias THAMBY
322, Point Pedro Road, Velvetuthurai



SABARATNAM SABALINGAM alias SABAH
Address: Parameswara College Lane, Thirunelvely South, Jaffna



ARUMUGAM VIVEKANANDAN alias MAMA
Address: 25, Adiyapatham Road, Nallur Market, Jaffna



SABARATNAM RATNAKUMAR
Address: Senkundan Lane, Kalliyankadu, Thirunelvely East, Nallur, Jaffna



PONNADURAI SATHIYASEELAN
Address: Urumpirai South, Chunnakam



NAVARATNAM SRI NARAYANADAS alias DASAN alias NAVARATNAM
Address: 71/1, Pungankulam Road, Jaffna



VYRAMUTHU NIRTHAKUMAR alias NIRTHAN
Address: Kumarapuram, Lawton Road, Manipay South, Manipay



KANAGASABAI MUDALI SIVARAJAH alias SADEESH alias SUDRAMANI alias SATHISKUMAR
Address: 43, Palaveedi, Nallur, Jaffna



SOMASUNDARAM SENATHIRAJAH alias MAVAI SENATHIRAJA
Address: Mavathipuram, Tellipalai, Jaffna



ARUMUGAM KIRUBAHKARAN alias KIRUBAINATHAN alias ANANDAN alias ALBERT SIVALINGAM alias KIRUBAHKARAN alias SINNARASA alias KITTUBAHARAN alias KIRUBA alias VISVENANDAN alias CHANDRAN alias RANJAN
Address: 70, Pasupathikulam Road, Ariyalai, Jaffna



MARIA DAVID ALOCIOUS KANAGASUNTHARAR
Address: 71, Vambadi Road Jaffna; Chalsea College, London following a course of Aeronautic Engineering



SUNDARAM SABARATNAM alias PERIYASIRI
Address: 97, Point Pedro Road, Tinnavely East, Jaffna; 354, Point Pedro Road, Nallur, Jaffna



SITHAMBARARAJAH PUSHPARAJAH
Address: Mylliddy Coast, K. K. S.



POOBALARATNAM NADESANANDAN alias NADESH alias P. RAJU
Address: 'Nadesapathy', Kodaikallar, Batticaloa

ශ්‍රී ලංකා රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව

www.padippakam.com

# கனமான ஒரு மரணம்

திரு. சபாலிங்கத்துடனான எனது சந்திப்புக்கள் பொதுக்கூட்டங்களிலேயே மூன்று நான்கு முறை நிகழ்ந்துள்ளன. அவருடன் தனிப்பட்ட விஷயங்கள் பற்றிப்பேசும் வாய்ப்பு என்றுமே கிட்டியதில்லே. 1992 பாரிஸ் இலக்கியச்சந்திப்பின் ஏற்பாட்டில் முன்னின்று உழைத்தார். தனது கருத்துக்களை பண்பாகவும் ஒளிவுமறைவின்றியும் கூறும் சுபாவம் அவருடையது என்பதை என்னால் உணரமுடிந்தது. அகதிவாழ்வு மனிதர்களைச்சீரழிக்கும் ஆபத்து அதிகம். நீண்டகால அகதிவாழ்வினூடு தனது புலம்பெயர்ந்த இருப்புக்குத் தனது செயற்பாட்டின்மூலம் அர்த்தம் தேடியதோடு தான் பெற்ற பயனை மற்றவர்களும் பெறவேண்டும் என்பதில் அவர் மிகவும் ஊக்கமாகச் செயற்பட்டார். பத்திரிகைகளையும் நூல்களையும் இலாபம் கருதாமல் வெளியிட்டு உதவும் ஆர்வமும் அக்கறையும் உள்ள சிலரிடையே சபாலிங்கம் குறிப்பிடத்தக்க ஒருவர். தனக்கு நேரடியான உறவு இல்லாத புலம்பெயர்ந்த ஏடுகள் பற்றிய அக்கறையும் அவரிடம் இருந்தது. முகம் தெரியாத மனிதர்களது ஆக்கங்களையும் அவற்றின் தரம் கருதிப் பிரசுரித்த உயர்ந்த பண்பு அவருடையது. முகம் தெரியாத இருவருக்கு உதவ முன்வந்து அவர்களாற் பறிக்கப்பட்ட உயிர் அவருடையது. அவருடைய இழப்புப் பல வகைகளிலும் பாரியது என்பதைப் புலம்பெயர்ந்த இலக்கியவாதிகள், வாசகர்கள், மனித உரிமை பற்றி அக்கறையுடையோர் ஏற்கனவே எழுதியும் கூறியும் உள்ளனர். அவரது இழப்பு அவரது குடும்பத்தினது என்ற அளவுக்கு இன்னும் எத்தனையோ புலம் பெயர்ந்த தமிழர்களாலும் தமது இழப்பும் தான் என்று உணரப்படுகிறது.

சபாலிங்கத்துடன் என்னால் இருவரது குரல்களையும் உயர்த்தாமலே கடுமையாக விவாதிக்க முடியுமளவுக்கு அவரது பேச்சில் நிதானம் இருந்தது. அண்மையிற் கூட அவர் எழுதிய சில கருத்துக்களை மறுத்து ஒரு பத்திரிகையில் எழுதினேன். இவ்வாறான மோதல்கள் அவருக்கும் எனக்குமிடையிலான பரஸ்பர மதிப்பை உயர்த்தினவே ஒழியக் குறைக்கவில்லை. இத்தகைய மனிதருக்கு இழைக்கப்பட்ட இந்தக் கொடுமை பற்றிநமது சமுதாயம் தலைகுனிய வேண்டும். இது போல இன்னொன்று நிகழாத வண்ணம் தடுக்கும் தர்மாவேசம் நம்முள் ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். அவரது கொலை தயங்காது கருத்துத் தெரிவிக்கும் உரிமைக்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு சவால் என்றே கருதப்படுகிறது. அவ்வாறாயின், அவரது மரணம் அந்த உரிமையின் மரணமாகாதவாறு உத்தரவாதம் செய்வது நம் ஒவ்வொருவரதும் பொறுப்பு. இதுவே அவருக்கு உகந்த இறுதி அஞ்சலி.

அவருடன் வாழ்ந்த அனுபவமே அவரது குடும்பத்தவருக்கு அவரது நெஞ்சுரத்தில் ஒரு பகுதியையேனும் அளித்திருக்குமென நம்புகிறேன். அது அவர்களது எதிர்கால வாழ்விற்கு ஒரு வலுவான ஆதாரமாக இருக்குமென்பது என் உள்ளார்ந்த எதிர்பார்ப்பு. அவருடைய நினைவுகள் அவரது பயனுள்ள பல பங்களிப்புகளூடு நிலைத்து வாழும்.

- சி. சிவசேகரம்.



படிப்பகம்

www.padippakam.com

## சபாலிங்கம் அவர்களால் மீள்பதிவு செய்யப்பட்டு இலாப நோக்கமற்று வெளியிடப்பட்ட புத்தகங்கள்




ஒரு படுகொலையின் மொழி

படிப்பகம்

www.padippakam.com

# திருமதி கோமதி சபாலிங்கம் நினைத்துப் பார்க்கிறார்...



1969 ம் ஆண்டு,

அவர் எனது தம்பியாருக்கு பரமேஸ்வராக் கல்லூரியில் மாலைவேளைகளில் பாடங்கள் சொல்லிக் கொடுப்பார். அந்த வேளைகளில் அரசியல் நடவடிக்கைகளிலும் தீவிரமாக இருந்தார். நாம் இருவரும் ஒருவரை ஒருவர் நேசித்தோம். அவர் தனது அரசியல் நடவடிக் கைகள் பற்றி எதுவும் எனக்குக் கூறுவதில்லை.
ஒருநாள் முத்துக்குமாரசாமியைப் பொலிஸ் கைது செய்து விட்டது. முத்துக்குமாரசாமியை கைது செய்தபடியால் தன்னையும் பொலிஸ் கைது செய்வார்கள் கைது செய்தால் எப்ப விடுவார்கள் என்று தெரியாது எனக்கூறி எனக்கு கூறும்படி எனது தம்பியிடம் கூறினார்.

ஆனால் அடுத்த நாளே பொலிஸ் அவரைக் கைது செய்து விட்டது. அப்ப தான் எனக்குத் தெரியும் இவர் அரசியலில் ஈடுபட்டு உள்ளார் என்று. இரண்டு வருடங்களாக கண்டி போகம்பரை சிறையிலிருந்தார். அந் நேரங்களில் சிறையிலிருக்கும் போது மாதத்தில் ஒரு கடிதம் போடுவதற்கு அனுமதி உண்டு ஆனால் அங்கு அவருக்கு சிறைக்காவலாளியாக இருந்தவர் தமிழர். அவர் உதவியால் எனக்கு மாதத்தில் நாலைந்து கடிதங்கள் போடுவார். சிறையிலிருக் கும்போது அவருடைய மூத்த சகோதரர் உணவு கொண்டுபோய்க் கொடுப்பார். இவ்வாறு சிறையில் இருக்கும் காலங்களில் அவரது சகோதரர்களும் நண்பர்களும் பெரும் உதவியாக இருந்தார்கள்.
இவ்வாறு இருக்கும்போது தான் சிறையிலிருந்து 4வது மாடியிலிருந்து விழுந்து விட்டார். விழும்போது இரண்டாவது மாடியில் உள்ள சட்டத்தில் அடிபட்டு விழுந்த படியால் அவருக்கு முதுகு எலும்பில் முறிவும், தலையில் பலத்த காயமும் ஏற்பட்டு கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் அங்குள்ள வைத்தியர் நன்றாக அவரைக் கவனிக்கவில்லை. அவருடைய சின்னண்ணர் யாழ் வைத்தியசாலையில் வைத்தியராக இருந்தார் அவர் உடனடி யாக கண்டிக்குச் சென்று தனது தம்பியின் நிலைமையை அங்குள்ள வைத்தியர்களின் மூலம் அறிந்து அவருக்கு இரத்தம் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டு அதன்பின்பு சிறையிலிருந்த



படிப்பகம்

நண்பர் இருவர் அவருக்கு இரத்தம் வழங்கினார்கள். இரத்தம் கொடுத்தவர்களில் குட்டிமணியும் ஒருவர். 21 நாட்கள் சுயநினைவு இல்லாமல் இருந்து இவருடைய சகோதரரின் முயற்சியால் ஒருவாறாக குணமடைந்தார்.

குணமடைந்த பின்னரும் சிறிது காலம் சிறையிலிருந்து பின்னர் விடுதலையாகி அவருடைய வீட்டிற்கு வந்தார். அன்று மாலையே எனது வீட்டிற்கு வந்தார். இவர் என்னைச் சந்திக்க வரும்போதெல்லாம் அரசியலை விடும்படி கேட்பேன். ஆனால் அவர் கூறுவார் " வலக்கண் நீ என்றால் இடக்கண் அரசியல் " எனக் கூறுவார். இவரைத் திருமணம் செய்து தர எனது உறவினர்கள் விரும்பவில்லை காரணம் திருமண நாளன்றே இவரைப் பொலிஸ் கைது செய்யலாம் என்றுகூ றித் தடுத்தார்கள்.ஆனுல் நான் ஒருநாளும் இவரை இழக்கத்தயாராய் இருக்கவில்லே. கடைசியில், இவருடைய அம்மாவும்சகோதரங்களும் இனிய மனதோடு எங்களது திருமணத்தை நடாத்தி வைத்தார்கள்.

திருமணத்தின் பின்னர் 9 மாதங்கள் பழட்டு பான எனும் சிங்கள இடத்தில் உப்புக் கூட்டுத் தாபனத்தில் மேலதிகாரியாக வேலை செய்தார் அவரோடு நானும் தங்கியிருந்தேன். அங்குள்ள சிங்கள மக்கள் இவரை "கொட்டியா" என்று தான் அழைப்பார்சள். யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கள மக்களுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் எங்களுக்கும் பிரச்சனை வரும். பிரச்சனை வந்தால் பொலிஸ் பிடிக்க வரும் அப்படிப் பிடிக்க வந்தால் அவர்களிடம் பிடிபடாமல் இருவரும் தற்கொலை செய்வோம் என்று கூறுவார். அதன் பின்னர் புத்தளத்திற்கு மாற்றம் கிடைத்தது 4 மாதங்கள் புத்தளத்தில் வேலை செய்தார். விடுதலைக்கு யாழ்ப்பாணம் வந்தோம். ஒருநாள் அவரும் நானும் அவருடைய சகோதரர்களும் இரவு படம் பார்ப்பதற்கு படமாளிகைக்கு சென்றோம். நாங்கள் இருந்த ஆசனத்திற்கு பின்னால் C.I.D மார் இருந்திருக்கிறார்கள். இவர் அவர்களை பார்த்துவிட்டு படம் பார்த்த அரைவாசியில் என்னிடம் கூறிவிட்டு அவர் வீட்டிற்கு வந்து விட்டார் அன்றிரவு வீட்டில் படுக்கவில்லை.

அதன்பின்பு தான் அவருடைய மூத்த சகோதரரின் ஆலோசனைப்படி இலங்கையில் இருப்பது நல்லதல்ல வெளிநாடு போவது நல்லது எனக் கூறி பண உதவி செய்து அவரை 1981 ம் ஆண்டு பிரான்சுக்கு அனுப்பிவைத்தார். அவர் வந்து மூன்று மாதங்களின் பின்னர் நானும் வந்தேன். 83 ம் ஆண்டு ஒரு மகனைப் பெற்றோம். பிரான்ஸ்க்கு வந்தும்கூட அகதிகளாக வருபவர்களுக்கு மனு தயாரித்துக் கொடுத்து பல உதவிகளைச் செய்தார். பிரான்ஸ்க்கு வந்த காலம் தொட்டு இன்றுவரை பத்திரிகைகள், புத்தகங்கள் சேகரிப்பார்.

நான் கூறுவேன் நம் நாட்டில் இருக்கமுடியாமல் தான் இங்கு வந்தோம். இனிமேலும் ஏன் எங்களுக்கு அரசியல் அரசியலை விடுங்கள் என்று ஆனால் அவர் கூறுவார் என்னுடைய உயிர்இருக்கும் வரை எங்கிருந்தாலும் எனது இனத்து மக்களுக்காக பாடுபடுவேன். அவர் "ஆசியா" என்ற நிறுவனத்தை ஆரம்பித்து புத்தகங்களை வெளியிட்டார். அவருடைய உயிர் போகின்ற கடைசி நிமிஷம் வரை அவர் சந்தோஷமாக இருந்தார். அன்றும் கூட இருவரும் சாப்பிட்டுக் கொண்டும், படம் பார்த்துக் கொண்டும் இருக்கும் போது "இன்ரபோன்" ஒலித்துக் கேட்டது. எனது அம்மா யார் என்று கேட்டு விட்டு கதவைத் திறந்து விட்டார். நான் அம்மாவிடம் வினாவினேன் யார் வருகின்றார்கள் என்று அம்மா கூறினார் தனக்குப் பெயர் விளங்கவில்லை என்று. அவர் சமையலறையில் போய் சாப்பிடுவோம் என்று கூறி சமையலறைக்குப் போகும்போது அவர்களும் உள்ளே வந்து விட்டார்கள். அப்போதும் கூட அவர் "இருங்கோ தம்பி" என்று மிகுதிச் சாப்பாட்டையும் சாப்பிட்டுவிட்டு அவர் சந்தோஷத்துடன் திரும்பவும் இருங்கோ தம்பி என்று கூறிவிட்டு அவர்களின் அகதி விண்ணப்பம் சம்பந்தமாக பேசுவதற்கு ஆயத்தமாகும்போது அவருக்கு முதலாவது துப்பாக்கிச்சூடு விழுகின்றது. அச்சத்தம் கேட்டு என்ன சத்தம் கேட்குது என்று கேட்டு முடிக்கும் போது அடுத்த சூட்டுச் சத்தமும் கேட்கின்றது.

அதன் பின்னர் ஓடி வந்து பார்க்கும் போது இரத்தம் கன்னத்திலிருந்து ஓடுகின்றது. அவ் இரத்தத்தைத் துடைத்து என்னப்பா நடந்தது என்று கேட்கிறேன் ஆனால் அவரிடமிருந்து ஒரு பதிலுமில்லை அப்படியே மெதுவாக முழங்காலிலிருந்து தலையை நிலத்தோடு சரித்து ஒரு சில நிமிடங்களுக்குள் அவர் உயிர் போய் விட்டது. எமது சொந்த நாட்டில் இருக்க முடியாத காரணத்தால் தான் நாம் அந்நிய நாட்டிற்கு வந்தோம். அந்நிய நாட்டில் கூட நம்மவர்கள் அவருடைய உயிரை அநியாயமாகப் பறித்து விட்டார்கள். நானும் பிள்ளையும் அவரை இழந்து தவிக்கின்றோம். இந்நிலை எந்தவொரு பெண்ணிற்கும் ஏற்படக்கூடாது.

www.padippakam.com

# EULOGY TO MY THAMBI : SABARATNAM SABALINGAM

"Where'er I roam, whatever realms to see,
My heart untravelle'd fondly turns to thee;
My brother good morning.

With sarong tied in a way typical only to you, the slight hunch; a manifestation of your earlier sacrifice for the cause , the shuffle, the slipper screeching I see you with a tissue in your right hand rushing from kitchen to study, posing momentarily in the sitting room. Was it yesterday? Oh no; it was back in September but the image is real and vivid. Sitting in front of my computer trying to compose a short reminiscent of you, I am already lost; where do I start. I know you would have said "sinnannah sollunka" (brother, tell me). Yes thampi I will, but still where do I start. The most amusing thing I remember was when you took my bicycle telling " Anna I will be back in thirty minutes" only to return three days later and said "Anna your bicycle has now got two new tyres". The smile and twinkle in your eyes defused the situation. I remember playing cricket with you in the front garden of the Arasady road house. The game you played hard but fair, glimpse of your enduring philosophy we saw in later years.

With our tears welling because of your 'murder most foul', committed by cowards, I am reminded of the dew on the jasmine flowers we used to pick for the temple in Velanai. Now our tears would have dried the flowers. Even in death you spoke



படிப்பகம்

www.padippakam.com

to me as I stood in front of you on the afternoon of the 4th may. We all know your heart had been shattered before by the inhumanity towards the oppressed, the outcast, the refugee and the common ideals besmirched by cruelty, greed and narrow self-righteousness. The hate of your assassins can only shatter the physical but not the abstract, as they never will know such concepts even if it was gift-draped to them. You lived by your intellect and understood that our liberation could only be achieved by using the weapons of integrity, reason, patience, understanding and love. The bullet of the imbecile could not breached your skull, thus illustrating to the whole world that while your physical being could be destroyed, the intellectual argument you espoused and made the ultimate sacrifice for will live for ever more. Those who committed the heinous crime will never see such sarcastic smile with which you have left us. You have died a hero. I am in no doubt that this smile alone will haunt those with the Calvinist view that there is only one truth and those who think differently are to be eliminated.

Rabiindranath Tagore once said there is only one history, the history of man. For me as one of my colleague said today, it is my beloved Lingan, it is, you for us, forever. All our national histories are just mere chapters. You will always remain the undying spirit of man who lifted the hearts of mankind to the heights we all aspire for, a new society and a new civilization.

The period prior to your incarceration in the 70's comes to mind; while we the mortal continue to worry about the impending doom to the family, you, soon to be the victim continue to advice us on the mundane. A philosophy of containment, which I appreciated only recently. As Doctor S.Radhakrishnan once wrote; that through failure and tragedy we the mortal might rise to higher reaches of spiritual victory. I am certain now more than ever that we shall overcome ignorance, suspicion, malice and hatred in our society. You will remember the murunkai tree splitting at the time of your first arrest, when we felt nothing but sadness, the strength with which you have lived since, showed that the ancient tree saluted you. My brother, I miss you terribly.

When I saw your body on the the 4th of May 1994, I was reminded of the past suffering inflicted on to you by a different people for an apparently justifiable reason. There I was in Kandy University Hospital, watching a young prisoner of only 23 years old in coma, chained hands and foot to all four posts of a bed. It was you my brother Lingan. To this day, I have never been prouder than that day to be a doctor, as I was able to care and thus give you back to this world; an intellect and humanitarian. In 27 years of medical training and practice, I have yet to see another incidence of such horrific back injuries as you had sustained then, without the associated paraplegia. It was your courage and determination that enabled you to walk normally. I salute you my brother and only hope that I am endowed with a fraction of that courage.



படிப்பகம்

www.padippakam.com

When all hopes of your existence was to be extinguished due to the enormity of your injuries sustained then; I can but only remember another hero of your status who gave you his blood and thus blessed you to continue the struggle for all Tamils worldwide. I can do nothing but salute you Honourable Kuddumani for your kindness and bravery. The blood shed on the 1st May 1994 is thus yours too, my most honoured friend.

My beloved thampi Lingan would have liked to know why I am so proud of him; then, now and forever. I shall enumerate: It is because of your honesty and your fight against the cussedness in human nature of moral blindness. Your enduring struggle against ignorance, suspicion, malice and hatred. Your courage against resistant to change and to scrap old prejudices. Your enlightened view of the world to view your fellowman as a friend as a collaborator in a common purpose and not as potential enemy to be feared, hatred, and killed. Your believe in the concept that we all should change the mind of our opposition without resorting to force. If we disagree with our opponent, it is not justification for destroying him. To have given voice to those Tamils who have no voice. Your enormous achievements in such a forshorten life. Above all being an unreconstructed Tamilan. To me personally; I have lost my best friend and confidante. My thampi; with whom can I now share my achievements and triumphs?. While you were unduly modest about your achievements, you were generous in giving credit to my meagre efforts. I shall forever be without your kindness and generosity. I regret this enormously.

Lacking your quick intellect, I am unable to take snap shots of the rapidly passing film of your life. But I am able to give a global view of my impression of my dearest thampi. A man of simple tastes, instinctively generous, ungoverneably corny, quite without artifice, totally loyal, utterly unaffected, unfailingly enthusiastic, highly principled, endearingly old-fashioned, immensely stubborn, seemingly ageless until the assassination. A tireless and conscientious worker with an innate wisdom tempered with by a refined sense of judgement and good humour. He devoted his life for the Tamils but ironically to be killed by Tamils with no conscience. He was a wise and articulate man, logical, intellectually honest and considerate, **to me he was one of the greatest Tamilan to have ever lived.**

The world has bled since the 1st may and had suffered from the dogmatism, of conformity. As you often said before, I cannot understand people with so much devotion and so little understanding. History tells us that all those who chose domination by force broke against the rock of moral law and came to their end. Here a Greek saying is more apt "Those whom gods would destroy they first make mad". I shall remember forever on your behalf; of those in the 70's and 80's conformist to the politics of the sinhalese state, now saying that the love of truth constrains them to denounce error of your killing.



படிப்பகம்

www.padippakam.com

You said not so long ago that, if we are sincere in our intention and earnest in our effort, we get to the supreme. With your death we seem to have reached the height of irresponsibility. With so many Tamil's heart destroyed and their dream shattered, but the beacon of hope you gave to so many will reverse the historical inevitability. You would hope as I presume; that there would be men like yourself with so much energy and sacrifice, eager to rectify the personnel injustice of the world.

I was and will always be proud to have shared a long relationship with you my beloved brother. I believe that when mankind awakes to the truth, universal brotherhood will follow and will regret your untimely forced departure. My present predicament was aptly stated by Catullus in 87 BC

> I come, by brother, to your piteous grave,
> To bring you the last offering in death
> And o'er dumb dust expend an idle breath;
> For fate has torn your living self from me,
> And snatched you, my brother, O, how cruelly!
> You take these gifts, brought as our fathers bade
> For sorrow's tribute to the passing shade;
> A brother's tears have wet them o'er and o'er;
> And so my brother, hail, and farewell evermore !.

I salute you my beloved brother and bid you farewell for now. We will meet again, as Solomon said; one man in a million will stick closer than a brother. I shall forever be grateful to you for your friendship, kindness and being my thampi. We will remember you to eternity sweet brother.

Now you belong to the ages.

Bon Voyage and Good night.

Your proud brother and family.

Professor. Sabaratnam Sabanathan MBBS, DM, FRCS (Eng & Edin), FICA.
Hunterian Professor to the Royal College of Surgeons of England.
Consultant Cardio-Thoracic Surgeon, Bradford, England.



படிப்பகம்

www.padippakam.com

# மௌனத்தின் மறுமொழி

சி. புஸ்பராஜா

இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டத்தில் எமக்குத் தெரிந்த பகுதிகளை ஒரு வரலாற்றுக் கண்ணோட்டத்தில் எழுத வேண்டும் என்ற ஆசை எனக்கு நீண்ட காலமாக இருந்தது. 1986 ம் ஆண்டில் ஒரு நாள் சென்னை பல்லாவரம் புகையிரத நிலையத்தில் இது பற்றி நீண்ட நேரமாக நான் வரதராஜப்பெருமாளுடன் கதைத்து அவரை எழுதும் படி கேட்டேன். அவருக்கு வசதிப்படாமல் போகவே நான் எழுதுவது பற்றி மிகவும் ஆழமாகச் சிந்திக்கத் தொடங்கினேன். எனது இருதய சோதனைக்காக 1992 ம் ஆண்டின் இறுதியில் நான் பிரான்ஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நேரத்தில் எனது எண்ணத்தை எழுத்துவடிவில் கொண்டுவர ஆரம்பித்தேன். 1993 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் எனது இருதயத்தில் பெரியதொரு சத்திரசிகிச்சை செய்யப்பட்ட போது அதில் கிடைத்த ஓய்வில் தமிழ் மக்களுடைய போராட்டத்தில் எனக்குத் தெரிந்த பகுதிகளை , எனது நினைவுகளை ஒரு வரலாற்றுக் குறிப்பாக எழுதி முடித்தேன். அந்த நேரத்தில் எனக்கு ஏதாவது நடப்பதற்கு முன் நான் எழுத வேண்டியவைகளை எழுதி முடிக்க வேண்டும் என்ற எனது ஆர்வத்துக்கு சபாலிங்கம் ஊக்கமூட்டினார், துணைநின்றார். நான் எழுதிய வரலாற்றை முழுமையாக்கிய பின் தனது பொருள் செலவில் அதை வெளியிட சபாலிங்கம் முன்வந்ததுடன் எனக்கு எந்த நேரமும் தனது ஆவணத் தொகுப்புப் பகுதிகளை நான் பாவிக்க அனுமதி தந்து வேண்டிய போது குறிப்பெடுத்தும் உதவினார்.

இன்று என்னால் எழுதி முடிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் போராட்ட வரலாறு பற்றிய எனது நினைவுகள் எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு ஏதாவது பயனுள்ளதாக அமையுமாயின் அதை எழுத எனக்கு உறுதுணையாக இருந்த எனது நண்பர் சபாலிங்கத்துக்கே அதன் அனைத்துப்பக்கங்களும் சமர்ப்பணமாகும். எனக்கு மட்டுமல்ல நல்ல கடமைகளைச் செய்ய முன்வரும் அனைவருக்கும் உறுதுணையாக சபாலிங்கம் இருந்தார் என்பது அவர் அருகில் நீண்ட காலமாக நெருங்கியிருந்து பார்த்தவன் என்பதால் நடைமுறைரீதியாக கண்டு கொண்டவன் நான். இந்த சபாலிங்கத்தை இன்று நேற்று நான் கண்டவனில்லை.

இலங்கைத் தமிழ் மக்களுடைய போராட்டமானது இளைஞர்களுடைய கைகளில் மாறும் அந்த ஆரம்பத்தில், அதாவது 1970 ,களின் முதற் பகுதியில் தமிழ் மாணவர் பேரவையினர் உண்டியல் குலுக்கி யாழ் நகரில் போராட்ட நிதி சேர்த்த அந்த நாளின் ஒரு மதிய பொழுதிற் தான் நான் முதன்முதலாக சபாலிங்கத்தை சந்தித்தேன். தேர் இழுக்கப் புறப்பட்டவர்களில் வடம் பிடிக்கும் முதல்வர்களில் ஒருவராக சபாலிங்கத்தை சந்தித்தேன். அன்று தொடங்கிய எமது உறவு சபாலிங்கம் கொல்லப்படும்வரை அவரது மிக நெருங்கிய நண்பனாக நானும் எனது ஊக்கசக்தியான துணையாக அவரும் என இருந்தது. சபாலிங்கம் சம்பந்தமான எனது நினைவுகள் என்றும் எனது மனதில் பசுமையானது. அவரது படுகொலைக்குப் பின் அந்த நினைவுகளை மிகவும் பத்திரமாக நான் பாதுகாத்து வருகிறேன்.

1970 - இலங்கைத் தமிழ் மக்களுடைய போராட்டத்தை ஒரு அர்த்தமான திசைக்குத் திருப்பிய தமிழ் மாணவர் பேரவையின் ஆரம்ப தலைவர்களில் ஒருவராக விளங்கிய சபாலிங் கம் தமிழ் இளைஞர்களின் சார்பில் முதல் வெளிவந்த "காவலன்" சஞ்சிகை வெளியிடுவதில் முன்நின்றார்.

1973 - மிதவாத அரசியல்வாதிகளின் கையிலிருந்த தமிழ் மக்களுடைய போராட்டத்தை தத்துவார்த்த, வர்க்க புரிந்துணர்வுடன் இளைஞர்கள், சாதாரண மக்கள் கைகளில் மாற்றும் சக்தியாக தமிழ் இளைஞர் பேரவையை ஆரம்பித்த எமக்கு பெரும் உந்து சக்தியாக விளங்கியவர் சபாலிங்கம்.



படிப்பகம்

www.padippakam.com

1975 - அனைத்துப் போலி அரசியல், போராட்ட வேடதாரிகளையும் முகம் கிழித்து மக்கள் முன் தமிழ் ஈழ விடுதலை இயக்கவாதிகளாக (TELO அல்ல) நாம் தோன்றிய போது தானும் ஒருவராக எம்முடன் இணைந்து கொண்டவர் சபாலிங்கம்.

1981 - புகலிட வாழ்வின் ஆரம்பத்தில் பிரான்சில் இலங்கைத் தமிழ் மக்களிடையே தோன்றிய சஞ்சிகையான "எரிமலை" யின் மூல கர்த்தாக்களில் சபாலிங்கம் முக்கியமானவர்.

1983 - தொடர்ச்சியாக புகலிட வாழ்க்கையில் ஆசியா நிறுவனர் என, தரமான புத்தக வெளியீட்டாளர் என, மனித உரிமைவாதி என, இலக்கியவாதி என, அகதிகளுக்கு வழிகாட்டுபவர் என சபாலிங்கத்தை பலரும் இனம் கண்டு கொண்டனர்.

எமது விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் நாம் ஒரு சிலர் மட்டுமே இன்று வாழ்கிறோம் என நினைத்திருந்த வேளையில் எம்மிடமிருந்து எமது அன்புக்குரிய நண்பர் சபாலிங்கம் பலாத்காரமாகப் பறிக்கப்பட்டுள்ளார். குறி தவறியவர்களின் செயலால் நாமெல்லாம் செய்வதறியாது ஒரு திகைப்பு நிலையை அடைந்திருக்கிறோம் என்பது என்னவோ உண்மைதான். ஆனால், நிச்சயமாக இது ஒரு திகைப்பு நிலையே தவிர தேக்கமடைந்த நிலையல்ல என்பதையும் நாம் அறிவோம். ராஜினி திரணகம, றிச்சார்ட் டீ சொய்சா போன்றவர்களின் கொலையின் வரிசையில் இன்று சபாலிங்கமும் இடம்பெறுவதன் மூலம் கடல் அலையைத் தடுக்கும் முயற்சிகள் இன்னும் தொடர்வது தெளிவாகிறது.
மாபெரும் வரலாற்று சம்பவங்கள் (கொடுமைகள்) நம் கண்ணுக்கு முன்னால் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது அல்லது நடைபெற்று முடிந்திருக்கும் பொழுது அவற்றின் தன்மை, முக்கியத்துவம் மற்றும் அவசியமான விளைவுகள் பற்றி தெளிவாகப் புரிந்து கொள்ளாது, அல்லது புரிந்து கொள்ள முயற்சிக்காது ஊமைகளாக மௌனித்துக் கொண்டு எத்தனை நாட்கள் இருக்கப் போகின்றோம் என்பதை அவர் அவர்களின் வீட்டுக்கதவுகள் தட்டப்படும்போது தான் தீர்மானித்துக் கொள்ளப் போகின்றோமா ?



மாவை சேனாதிராஜாவுடன் சபாலிங்கம், அவர் மனைவி கோமதி மகன் சபா சேயோன்.



படிப்பகம்

www.padippakam.com

## சபாலிங்கம்

# ஒரு படுகொலையின் மொழி

சேரன்

மே மாதம் முதலாம் திகதி மதியம் ஒரு மணிக்கு எனது மனதுக்கினிய நண்பன் சபாலிங்கம், தன்னுடைய பரிஸ் நகர வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்டான். இரண்டு தமிழ் இளைஞர்கள். இரண்டு துப்பாக்கிக் குண்டுகள். ஒரு நிமிடத்துக்கும் குறைவான நேரம். அவ்வளவுதான். தமிழுக்கு அறிவைக் கொடுக்க வேண்டும் என்ற தீராத விருப்புடன் பதிப்பாளனாகவும், ஆவணக் காப்பாளனாகவும், அவ்வப்போது எழுதும் எழுத்தாளனாகவும், இலக்கிய ஆர்வலனாகவும், இனிய மனிதனாகவும் பல்வேறுபட்ட ஆளுமை முகங்களுடன் உலவித் திரிந்தவனின் கதை முடிந்து விட்டது. தற்காலிகமாக.

கொலையாளிகளும் அவர்களுக்குப் பின்னால் இருந்த கொலை கலாசாரக் கருத்தியலின் சூத்திரதாரிகளும் உண்மையிலேயே யார் என்பதை இப்போதைக்கு மிகுந்த உறுதியுடன் என்னால் சொல்ல முடியாமலுள்ளது. சபாலிங்கத்தின் குடும்பத்தினரும் நெருங்கிய நண்பர்களும் கொலைக்குப் பொறுப்பு விடுதலைப் புலிகளே என்று நம்புகிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் வேறு தனிப்பட்ட எதிரிகளோ அல்லது " சுட்டுக் கொலை செய்தால் தான் நாம் பட்டது தீரும் " என்று சபாலிங்கத்தின் மீது கோபமாக இருந்தவர்கள் எனவோ எவரும் இருக்கவில்லை. எவ்வகையான சந்தேகத்திற்கும் இடமின்றி இது ஒரு அரசியல் படுகொலை; மாற்றுக் கருத்துக்களையும் மாற்றுச் சிந்தனைகளையும் சகித்துக் கொள்ள முடியாதவர்களும் எதிர்க் கருத்துக்களைக் கேட்டுக் கொள்ளக் கூடிய அளவுக்கேனும் நெஞ்சுரமில்லாத கோழைகளினதும் அரசியல் தீர்மானம் தான் நண்பன் சபாலிங்கத்தின் படுகொலை என்று நான் உறுதியாக நம்புகிறேன். கடந்த காலங்களிலும் ராஜனி திராணகம முதல் தில்லைநாதன் வரை ஏராளமான போராளிகளைப் பலியெடுத்துள்ள ஈழ தேசியப் போராட்டத்து உட்கொலைப் பாரம்பரியத்தின் நச்சுத் தொடர்ச்சிதான் இந்தக் கொலையும் என்பது பலருக்கும் புரிந்திருக்கிறது. வரலாறு என்பது இன்றுடன் முடிவடைந்து போகும் ஒன்றல்ல. அது போலவே இப்போது விடப்படும் அறிக்கைகளும் எழுதப்படும் தீர்ப்புகளும் என்றென்றைக்குமே சத்தியக் கடதாசிகளாக இருக்கப் போவதுமில்லை. காலம் என்கிற ஒரு மந்திரவாதி எல்லா உண்மைகளையும் வரலாற்றில் மறைக்கப்பட்ட விஷயங்களையும் ஒரு நாள் வெளியே கொண்டு வருவாள். அது வரையில் எங்களுடைய " நம்பிக்கைகளுடன் சிலவேளை நாங்கள் தோற்றுப் போக வேண்டி நேர்ந்தாலும் " ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

கடந்த பதினைந்து வருடங்களாக மிகவும் நெருங்கிய நண்பர்களாக என்னுடைய இலக்கிய/ அரசியல் வாழ்க்கையின் அந்தரங்கத் துணைவர்களாக இருந்த பலரை மிகவும் துயர் சூழ்ந்த நிலையில் இழந்து விட்டிருக்கிறேன். இலங்கை இராணுவம், இந்திய இராணுவம், விடுதலைப் புலிகள் மற்றும் இயக்கங்கள் என்று எல்லோருமே என்னுடைய நண்பர்களைப் பலிகொண்டுள்ளனர். அவரவர்க்கு அவரவர் சோகங்கள் என்பது எங்களுடைய மக்களைப் பொறுத்தவரையில் அனைவருக்குமே பொருந்தும் ஒரு துரதிர்ஷ்ட வசமான உண்மை என்றாலும் இத்தகைய மனித இழப்புகளின் விலையையும் முக்கியத்துவத்தையும் இதய பூர்வமாக உணர்ந்து கொள்ள முடியாத அளவுக்கு இறுகிப்போன இராணுவக் கலாசாரத்தாலும் இராணுவ மனோநிலையாலுமே எம்மில் பெரும்பாலானோர் வசியப்படுத்தப் பட்டுள்ளார்கள் என்று தோன்றுகிறது. " போர்க்களத்துக்குச் சென்றவர்கள் வென்றதுண்டு வந்ததில்லை" என்று ஜெர்மானியக் கவி பிறெஃட் பாடுவார். வெற்றிகளின் களிப்பில் யுத்த அவலத்தையும் வராது போனவர்களையும் மறந்து போகப் பண்ணுகிற ஒரு கருத்தியல் ஆக்கிரமிப்புத்தான் இப்போது நமதாரில் நடந்து கொண்டிருக்கிறது. கேள்விகளுக்கு அப்பாலான ஒரு தலைமைப் பீடமும் நம்பிக்கையையும் தலைவர் மீதான விசுவாசத்தையும் தவிர வேறெதையுமே கருதாத ஒரு விடுதலைப் பட்டாள



படிப்பகம்

மும் -அது எவ்வளவு தான் சாமர்த்தியம் மிக்கதாகவும் இருந்தாலும் -அது உண்மையான விடுதலையைப் பெற்றுத் தந்து விடப் போவதில்லை. இது வரலாற்றின் துயரம்; துயரத்தின் வரலாறு. இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டபடியால்தான் நண்பன் சபாலிங்கத்துக்குத் துப்பாக்கிக் குண்டுகள் பரிசளிக்கப்பட்டன. கருத்துக்களைக் கருத்துக்களின் தளத்தில் சந்திப்பது என்பதும் பேனா முனையைப் பேனாமுனையில் சந்திப்பது என்பதுமே வீரத்துக்கு அழகு. பேனா முனையைத் துப்பாக்கிக் குண்டுகளால் சிதைப்பதுதான் மாவீரம் என்பது எங்களுடைய கருத்தியலாக மாறி விட்டால் எங்களுடைய தேசத்தின் கல்லறைக்குள் ஒரு எலும்புக்கூடு கூட மிஞ்சாது. கல்லறையின் மேல் ஒரு பட்டிப்பூ கூட பூக்காது. இரத்தம் தோய்ந்த வெறும் காற்றும் புத்திர சோகத்தின் முடிவற்ற அழுகுரலும் தான் மிஞ்சும். மறுபடியும் மறுபடியும் இத்தகைய படுகொலைகள் இடம் பெறுவது என்பது அந்தப் படுகொலைகள் பேசும் மொழி என்ன என்பதை எங்களுக்குத் தெளிவாகச் சொல்கிறது.

" உண்மையில் இத்தகைய கொலைகள் பயனுடையது மட்டுமன்றி அவசியமானதும் கூட. இத்தகைய படுகொலைத் தீர்ப்புக்கள் நாங்கள் எவ்வித ஈவு இரக்கமுமின்றித் தொடர்ந்தும் போராடுவோம்; எதற்கும் தயங்க மாட்டோம் என்பதை உலகுக்குக் காட்டுகிறது. எதிரிகளை அச்சுறுத்தவும், கிலி கொள்ள வைக்கவும் நம்பிக்கை இழக்கச் செய்யவும் மட்டுமன்றி நமது சொந்தப் போராளிகளை உலுப்பவும் முழுமையான வெற்றி அல்லது பூரணமான அழிவு இரண்டில் ஒன்றைத் தவிரப் பின் வாங்குதல் என்ற பேச்சே இல்லை என்பதை அவர்களுக்குக் காட்டவும் இத்தகைய படுகொலைகள் எமக்கு அவசியம்"

சோவியத் புரட்சியின் பின்பு சார்மன்னரும் அவருடைய மனைவியும் ஐந்து பிள்ளைகளும், வீட்டு வேலைக்காரரும், வீட்டு மருத்துவரும், சமையல்காரரும், பிள்ளைகளின் வளர்ப்பு நாயும் கொல்லப்பட்டதை நியாயப் படுத்தித் தன்னுடைய நாட்குறிப்புகளில் ட்றொட்ஸ்கி எழுதியுள்ள வற்றிலிருந்து ஒரு பந்தியே மேலுள்ளது.

ட்றொட்ஸ்கியினுடைய மகன் லியோன் ஸேதவ் பின்பு ஸ்டாலினுடைய கையாட்களால் பரிஸ் நகரில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். ட்றொட்ஸ்கியும் மெக்ஸிகோவில் வைத்து ஸ்டாலினின் ஆட்களான மெக்ஸிகோ இடதுசாரிகளால் படுகொலை செய்யப்பட்டார். ஒரு வரலாற்றுக் குறிக்கோளை நிறைவேற்றுவதாக எத்தகைய படுகொலைகளையும் புரியலாம் என்று நம்பியவர்களுள் ட்றொட்ஸ்கியும் ஒருவர் அத்தகைய தர்க்கம் அவருடைய படுகொலை யில் மட்டுமன்றி ஸ்டாலினை விரோதித்த லட்சக் கணக்கானோரின் படுகொலைகளிலும் முடிந்தது.

விசுவாசமும் நம்பிக்கையும் எல்லாவகையான படுகொலைகளையும் நியாயப்படுத்தும் என்பது எமது தேசியப் போராட்டத்திலும் ஊடுபாவாக ஓடி நிற்கிறது. எனினும் இது எங்களுடைய தேசியத் தற்கொலை என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இத்தகைய படுகொலையைப் புரிபவர்களும் நியாயப்படுத்துபவர்களும் திரிகரண சுத்தியாக நம்புவது என்னவென்றால் இத்தகைய படுகொலைகள் தாம் சார்ந்த குறிக்கோளை எய்த அவசியம் என்பது மட்டுமல்ல அந்தக் குறிக்கோள் புனிதமானது , தெய்வீகமானது அல்லது உன்னத மானது என்பதால் இத்தகைய படுகொலைகளைப் புரிபவர்கள் சாதாரணமான ஒழுக்கத் தளைகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதையுமாகும். இது ஒரு ஆழ்ந்த, கேள்விக்குட்படுத்தப் பட முடியாத ஒரு நம்பிக்கையாகும்.

மூடுண்ட மனமும் கோட்பாடுடன் சார்ந்து இறுகிப்போன சிந்தனையின் உறுதிப்பாடும், விமர்சனங்களை வெறுக்கும் போக்கும் அரசபலத்துடனும் இராணுவ பலத்துடனும் ஒன்றிணை யும்போது கிடைப்பது ஹிட்லர், பொல்பட் ஸ்டாலின்.

" கிறிஸ்துவின் பெயரால் நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன். நீங்கள் தவறிழைப்பது சாத்தியம் என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள் "

குறொம்வெல் அவர்களுடைய இந்த அறிவுரையை சபாலிங்கம் மிகவும் மதிப்பு வைத்திருந்த றெஜி சிறிவர்தன அவர்களின் கட்டுரையொன்றிலிருந்து நான் பெற்றுக் கொண்டேன். எதிர்காலத்திலும் துப்பாக்கிக் குண்டுகளைத் தீர்க்க முன்பாகக் கொலையாளிகள் இந்த அறிவுரையை நினைத்துப் பார்ப்பார்களா என்பதை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை !

www.padippakam.com



தனது ஆவணத் தொகுப்புகளின் ஒரு பகுதியின் மத்தியில்
**சபாலிங்கம்**



திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், திரு. பகீரதன் அமிர்தலிங்கம் குடும்பத்துடன்
**சபாலிங்கம்**



படிப்பகம்

www.padippakam.com

இலங்கையில் "புத்தளம் வரலாறும் மரபுகளும்" என்னும் புத்தகமும், சென்னையில் "தமிழ் அழகியல்" என்னும் புத்தகமும் சபாலிங்கத்தின் பொருள் உதவியுடன் வெளிக்கொணரப்பட்டது.






CONSEIL DE LIBERATION DE TAMOUL EELAM (FRANCE)

தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்சு)

TAMIL EELAM LIBERATION COUNCIL (FRANCE)

~~8, Rue Charles MOUREU
75013 PARIS~~

10, Rue Des Martyrs,
75009, Paris.

The Honourable Prime Minister of India,
New Delhi.

This is to certify that Mr.Saberatnam Sabalingam is a representative from the Tamil Eelam Liberation Council(France) and he is being authorised to represent on behalf of our council in the mission to meet you.

Thanking you.

Specimen signature

of Mr.Sabaratnam Sabalingam.

Yours Faithfully,

General Secretary,
Tamil Eelam Liberation Council(France)

தமிழ் மக்கள் பிரச்சனை தொடர்பாக இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியை சந்திக்க பிரான்ஸ் தமிழீழ விடுதலைப் பேரவை சார்பில் 1983 ம் ஆண்டில் அனுப்பப்பட்ட பிரதிநிதிகளில் சபாலிங்கமும் ஒருவர்.



படிப்பகம்

www.padippakam.com

# சபாலிங்கம்

எழுத்துக்கள் ஓட முடியாமல் ஸ்தம்பிக்கும் என்பதை உன்னைப் பற்றி நான் எழுத முயன்ற போது தான் புரிந்து கொண்டேன்.

நெஞ்சிலே ஒரு அறை விழுந்து என் உயிரே துடித்தது நீ மறைந்த செய்தி கேட்டவுடன்.

உனக்கும் எனக்கும் இடையில் இருந்த உறவு உனக்கும் எனக்கும் மட்டும் தான் புரியும்.

என்னவனே...! எனக்கு எல்லாமானவனே ! வயதைக் காட்டிக் கூட நீ என்னிடம் மரியாதை பெற விரும்பவில்லை. அண்ணே! என்று கூட கூப்பிடாதே அது கூட நம்முறவில் போலித்த னத்தை நுழைத்துவிடும் எனத் தடுத்து விட்டாய்.

என்னவனே! புகலிடவாழ்வின் ஆரம்பநாட்களை நினைத்துப் பார்க்கிறேன். நீ வந்த சில தினங்களிலேயே நான் உன்னைச் சந்தித்து விட்டேன். பரிச்சயமற்றிருந்தும் ஒரு அன்பு முளை விடத் தொடங்கியது. பின்பு நீ எரிமலையில்... நான் தமிழ் முரசில் இருந்தும் உறவு வளர்ந்தது. தவறான தெரிவு என்று நீ புரிந்து கொண்டாய் பின் விலகிக் கொண்டாய்.
1983 - இனப் படுகொலைக்கெதிராய் சிறீலங்கா தூதரகத்தின் முன் நாம் அணி வகுக்கிறோம். வேலை காரணமாய் உன்னால் வரமுடியவில்லை இருப்பினும் நீ கோமதி அக்காவை அனுப்புகிறாய். நான் நெகிழ்ந்து போகிறேன். உன்னைப் புரிந்து கொள்ள ஆரம்பிக்கிறேன்.

இதற்கிடையிலே என் தனிச் சொருகல். 1985 இல் என் காதலை உன்னிடம் தெரிவிக்கிறேன். என்னையும் என்னவளையும் அழைத்து உன் வீட்டில் முதல் விருந்து தருகிறாய். அதைத் தொடர்ந்த என் பதிவுத் திருமணத்தில் வந்தவர் அனைவருக்கும் நீயே உணவு சமைத்துப் பரிமாறுகிறாய். அத்தோடு முடிந்ததா நம் உறவு எங்கள் திருமணத்தில் என் பெற்றாரின் இடத்தில் நீயும் கோமதி அக்காவும் நின்று என்னைத் தாரை வார்க்கிறீர்கள். எதை மறப் பது....? எதை நினைப்பது...?



படிப்பகம்

தோல்விகளை முறியடித்து தைரியமாக எழுந்து நின்ற மனிதன் நீ. முகத்துக்காக உறவு என்பது உன் அகராதியில் இருந்ததில்லை. உழைக்கும் பணத்தில் பெரும்பகுதியை புத்தகங்களுக்கும், பத்திரிகைகளுக்கும், ஆவணங்களுக்கும் செலவழிக்கும் தைரியம் இந்தப் புகலிடத்தில் உன்னைப்போல வேறு யாருக்குஇருந்தது. ஆளுக்கு ஆள் தங்கள் புத்தகங்களை தாங்களே பதித்து வெளியிட போட்டி போட்டிபோது திரை மறைவில் இருந்த எத்தனை பேரை நீ வெளிக் கொணர்ந்தாய். உன் உடல் பலவீனமுற்றபோதும் எத்தனை கட்டுப் புத்தகங்களை நாம் சுமந்திருப்போம்.

நீ ஒரு சந்திப்பு மையம். உன்னிடம் நாம் அனைவரும் வருவோம். நீ எமக்கு அனைத்தையும் தருவாய். அராஜகத்துக்கு எதிரான உனது துணிச்சலான நேர்மை நான் இன்றும்ம தலை வணங்கும் விடயம்.
வெறுமனே வெட்டிப் பேச்சோடு நின்று விடாமல் அராஜகத்துக்கெதிரான உன் ஆரோக்கிய மானஅரசியல் வேலைகள் வரலாற்றில் ஒரு அம்சம். எதிரியோடு சமரசம் என்ற பேச்சுக்கே உன் வாழ்க்கையில் இடமிருக்கவில்லை. அதே சமயம் அராஜகத்தின் அனைத்து வடிவங்க ளையும் நிராகரித்தாய்.
உனது வெளியீடுகள், உனது ஆவணத் தொகுப்புக்கள் இன்னமும் எம்மக்களுக்கு புகலிடத்தில் பெரும் பயனைத் தந்தன.

புகலிடத்தில் பலரைப் போல நீ அரசியலையோ.... இலக்கியத்தையோ வெறுமனே பேசிக் கொண்டு மாத்திரம் இருக்கவில்லை. அரசியல் வேறு, இலக்கியம் வேறு நம்மவரின் வாழ்வியலிலிருந்து அரசியலை விலக்கி இலக்கிய முகமூடி தரிக்க முனைந்தவர்களை நீ தீர்க்கமாக எதிர்த்தாய். புகலிடத்தில் அரசியலையும் இலக்கியத்தையும் இணைப்பதில் நீ கிட்டத்தட்ட வெற்றி கண்டாய்.

வறட்டுத்தனமான சித்தாந்தங்களையோ அல்லது தனிமனித வழிபாட்டையோ நீ ஏற்றுக் கொண்டதில்லை. எந்த முகத்துக்காகவும் நீ உன் விமர்சனங்களையும் மாற்றிக் கொண்ட தில்லை. யதார்த்தத்தை நீ எப்போதுமே புரிந்து கொண்டவன்.

மற்றவர்களை மதிப்பவர்கள் பெரும்பான்மையாக வாழும் இந்தச் சமூகத்திலே நீ மற்றவர் கள்..... நான் உட்பட வளர்வதற்கு ஏணியாக இருந்தாய். எத்தனை தரம் நான் உன்னை உன் முகத்துக்க முன்னால் கடுமையாக விமரிசித்தபோதும் உன் சிரிப்பு மாறியதில்லை உன் பதில் கடுமையாக இருந்ததில்லை.

உனது இடம் நிரப்ப முடியாதது. அதை புகலிடம் விரைவில் புரிந்து கொள்ளும். நமக்கே நாம் ஆறுதல் சொல்ல முடியாத நிலையில் வேறு யாருக்கு என்னால் ஆறுதல் சொல்ல முடியும். இருந்தாலும் ஒன்று உனது பணிகள் தொடரும்.

உன்
- உமாகாந்தன்.

www.padippakam.com

# சில நினைவுகள்...

க. அசோக்

கடந்த காலங்களில் இயக்கங்களின் வெறித் தனங்களின் பல் முனைகளினால் என் இனிய நண்பர்கள் பலரை ஈழத்திலும், தமிழகத்திலும் பறி கொடுத்த வரலாறு நிறைய உண்டு அவற்றின் கொடு துயர் தந்த பயமும், வாழ்வின் மீதான நேசிப்புமே எம்மையெல்லாம் அகதியாய்த் தள்ளிற்று. இங்கேயும் அவ்வாறான துப்பாக்கி அராஜகங்களும், எங்கள் வாழ்வை நசுக்கும் உச்சக் கொடூரங்களும் எங்கள் நேசங்களையும் சுதந்திரங்களையும் பறிக்கும் என்றால் நாம் என்ன செய்வது ?

* * *

1983 ம் ஆண்டின் ஓர் காலப் பகுதி
"புரட்சிக்கனவுகளோடு" பின் தளம். இயக்கங்களிடையே ஒருங்கிணைவு வேண்டி இது தொடர்பாய்ப் பேசுவதற்கு இருவர் வந்துள்ளதாக ஓர் செய்தி. இருவரில் ஒருவராய் சபாலிங்கம் அவர்கள். இவர்களின் வருகைக்காலம் இந்தியாவின் வேறு பிரதேசம் ஒன்றில் நான் இருந்தமையினால் சபாலிங்கம் அவர்களை சந்திக்க முடியாத சந்தர்ப்பமாய் அக் காலம் அமைந்திற்று.

* * *

1986 நான் சார்ந்த அமைப்பின் அராஜக உச்சநிலைத் தாக்கத்தினால் தாக்குண்டு இந்திய நண்பர்களின் உதவிகளோடு இந்தியக் கிராமப் புறங்களில் வாழ்ந்திருந்த காலம் நானும் என் தமிழக நண்பர்களும் சேர்ந்து ஓர் சஞ்சிகையை வெளிக்கொணரல் அவசியம் தொடர்பாய் ஆலோசனை கொண்டிருந்த தருணத்தில் சபாலிங்கம் சென்னைக்கு வந்தார். எங்கள் சஞ்சிகையின் வெளிநாட்டு விநியோகம் தொடர்பாய் பேசுவதற்கு "எக்ஸ்ரே ரிப்போர்ட்" பத்திரிகைக் காரியாலயத்தில் சபாலிங்கம் அவர்களை சந்திக்க இருந்ததாய் ஓர் நினைப்பு. இறுதி நேரத்தில் என் அவசர வெளியூர்ப் பயணம் அன்றைய சந்திப்பையும் நிகழாமல் செய்திற்று.

* * *

1992 இறுதிப் பகுதி பாரிசில் சபாலிங்கம் அவர்களை நேரில் சந்திக்க முடிந்தது. இலக்கிய உலகம், சமகாலப் பிரச்சனை இவை தொடர்பாய் அவர் பேச்சும், பார்வையும், தேடலும் அவர் பால் என்னை ஆச்சரியம் கொள்ளத்தூண்டிற்று. இப்படியாய் எங்கள் நட்பு. சித்தாந்த கோட்பாட்டுத் தளத்தில் எம் இருவருக்குமிடையில் முரண்பாடுகள், விவாதங்கள் வருவதுண்டு. இருந்த போதிலும் மானுட விடுதலையின் செயற் பாட்டுத் தளத்திலும் நேசிப்பிலும் நாங்கள் ஒன்றாய் நிற்பதாய் உணர்ந்தோம்.

இக் காலங்களிற்தான் பாரிஸ் இலக்கியவாதிகளோடும் எனக்கு பரிச்சயம் கிடைத்தது. இப் பரிச்சயம் எனக்குக் கசப்பான அனுபவங்களை சொல்லிற்று. புறம் சொல்லலும், குழிபறித்தலுமே முற்போக்கு உலகின் அடிப்படை என இவர்கள் காட்டி நின்ற தன்மையும் இவர்களின் பல்வேறு முகங்கள் என்னுள் ஏற்படுத்திய அதிர்வும், பயமும் என்னைத் தொற்றிக் கொண்ட நேரத்தில் தான் ஓசை சஞ்சிகையின் தொடர்பு கிடைத்தது. ஓசையின் பால் நம்பிக்கையும் என்னுள் வளரலாயிற்று. இக் காலங்களில் ஓசையின் வளர்ச்சி தொடர்பாய் சபாலிங்கம் அவர்களை அணுகியபோது அவர் காட்டிய ஆதரவு பாரிஸ் இலக்கிய உலகம் தொடர்பாய் சில வேறுபட்ட அபிப்பிராயத்தையும், சபாலிங்கம் போன்ற இலக்கியத் தேடல்கள் கொண்ட நல்ல மனிதர்களின் உலகத்தையும் எனக்குக் காட்டியது.



படிப்பகம்


www.padippakam.com

சபாலிங்கம் அவர்களோடு பழகிய காலங்கள் குறுகியவையாக எனக்கு அமைந்த போதிலும் அவரின் இலக்கியக் கனவுகளும், அது தொடர்பான செயற்பாடுகளும் எனக்குப் பல வேளைகளில் மலைப்பைத் தந்ததுண்டு. தமிழ் புத்தக வெளியீட்டுத் துறை என்பது ஐரோப்பிய நாடுகளில் பொருளாதார நஷ்டத்தையும், வீண் சிரமங்களையும் கொடுக்கும் ஒரு விடயம் எனத் தெரிந்திருந்தும் இவர் இத்துறையினுள் காலடி எடுத்து வைத்த தன்மை இலக்கியத் தேடல்களின் மீதான ஆர்வத்தையும், படைப்பாளிகளின் வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த அக்கறையையுமே எமக்கு காண்பிக்கின்றது. இப்படியாய் சபாலிங்கம் அவர் இலக்கிய வாழ்வும்..........அவர் வாழ்வோடு எங்களிடம் சில நினைவுகளும் தேங்கியே நிற்கின்றது. நிற்கும்.

* * *

அன்றைய காலத்தில் இன்னுமோர் அராஜகக் கும்பலினால் வயல்வெளிப் படுக்கையில் கொலையுண்ட நண்பன் இறைவனுக்காக யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சேரனினால் பாடப்பட்ட அஞ்சலிக் கவிதை இன்னும் என்னுள். அவற்றிலிருந்து சில வரிகள் சபாலிங்கம் அவர்களுக்கு மீண்டும் சமர்ப்பணம்.

மறுபடி, மறுபடி தவறுகள் செய்பவர்
மனிதரேயல்லர்.
மரணம் வாழ்வின் ஒரு முடிவல்ல
உங்கள் சொற்களை விடவும்
 செயல்களை விடவும்
உங்கள் மரணம் மிகவும் வலியது.





படிப்பகம்

www.padippakam.com

## எனது அன்புக்குரிய 'ரசிகமணி' ச.சபாலிங்கம்

தமிழ் இலக்கிய உலகில் 'ரசிகமணி' எனும் கௌரவம் இந்தியாவில் மறைந்த திரு.டி.கே.சிதம்பரமுதலியார் (டி.கே.சி.) இலங்கையில் திரு.கனகசெந்திநாதன் ஆகியோருக்கு மட்டும் உரியது.

நான் நேரடியாக கண்டு பழகிய நண்பர் திரு.ச.சபாலிங்கம் நிச்சயமாக அந்த கௌரவத்திற்கு உரியவரே. தமிழ் கவிதை, வரலாறு, அரசியல் எனும் பல துறைகளில் புகுந்து வெற்றி கண்டவர். அது மட்டுமல்ல விருந்துபசரிப்பதில் நிபுணர். சமையல் கலையில் மேதை. இசையைக் கேட்டு ரசிப்பதில் ஆர்வம் கொண்டவர் அவர்.

பாடசாலை நாட்களில் தொட்டு மறையும்வரை நூல்கள், ஆவணங்களைச் சேகரித்தவர். இப்படி அவரைப்பற்றிச் சொல்ல எவ்வளவோ உண்டு. அவரது மனிதநேய பண்பு, ஈடு இணை யற்றது. உதவி கேட்டு வந்தவர்களுக்கு மட்டுமல்ல தானாகத் தேடியும் உதவி நல்குவார். அவரது இல்லத்தில் செவிக்குணவும் அதற்குப் பின்னர் வயிற்றிற்குணவும் புசித்தவர்கள் பலர். தான் எழுதுவதைவிட ஆர்வம் மிக்கவர்களை எழுதத் தூண்டி அவர்களின் படைப்புக்களைத் தன் சொந்தச் செலவில் பிரசாரம் செய்வதில் அவருக்கு ஆர்வம் அதிகம் இருந்தது.

"ஏதும் பிரச்சனையா? உடன் சபாலிங்கத்திற்கு போன் செய்ய வேண்டும்" என்பது பல நண்பர்களின் வீடுகளில் சர்வசாதாரணமாக நிலவியது.

கிடைத்தற்கரிய பல நல்ல குணங்கள் ஆற்றல் அனைத்தும் கொண்ட இந்த அரிய மனிதரின் மறைவு தாங்க முடியாத அதிர்ச்சியாக எமக்கு அமைந்ததில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

**வ.ஆனந்தசிவம்**



படிப்பகம்

www.padippakam.com


## "ஆசியா" மூலம் சபாலிங்கத்தால் வெளியிடப்பட்ட புத்தகங்கள்.
















ஒரு படுகொலையின் மொழி

www.padippakam.com

# உயில்

வ.ஐ.ச.ஜெயபாலன்

கண்ணி வெடிகள் புதைந்த நிலத்தில்
கனித்தோட்டங்கள் வளர்க்கப் போகிற
என்னரும் பேரரே.....
என் பேரரின் பேரரே....
உங்களுக்காக
இல்லாது போன நேற்றும்
இன்னும் தோன்றாத நாளையும்
இன்றுமாயிருக்கிற வாழ்வின் பாடலை
கற்களில் பொறிப்பேன்

உங்களுக்காக
துப்பாக்கிகளில் மாட்டுப்பட்டு
எதிர் புதிர்ச் சுழற்சியில் கிழிந்துபடுகின்ற
ஈழத்துக் கவிதையை மீட்டுவந்து
வாழ்வின் படுகையில் ஓடவிடுவேன்

நம் கால்களில் ஏறியது
இன ஒடுக்கல் போர் எனும் விசமுள்
முள்ளை எடுக்க முள் கைக்கொண்டோம்
முள் கைக்கொண்ட நம் தலையாரிகள்
முள் எடுத்தலை மறந்து
முள் வழிபாடும் முள் சமயமும் வளர்த்தனர்
புனித முள்ளினால்
தம் கண்களையே குத்திக்கொண்டனர்

தமிழருக்கினி ஒளியே எதிரி
விளக்கேற்றுபவனே துரோகி என்றாயிற்று
மின்மினிகளைக் கூட
தெருக்கம்பங்களில் அறைந்து கொன்றிட
முள் கோவில்களின் மடாதிபதிகள்
உத்தரவிட்டனர்
முள்கோவில்களிடை
யார் முள் உண்மைத் தெய்வமுள்ளென்று
முடிவிலாப் புனித யுத்தம் வெடித்தது.....
இப்படியாக எதிரி வென்றான்
இவ்வாறான இன்றில்
உங்களுக்காக நாங்கள் வாழ்ந்தோம்
வசந்தத்தைத் தேடிப் பூத்துக் கனிந்தோம்
வியர்வை மணி சிந்தி
பொன்விளைச்சலாக ரசவாதம் செய்தோம்
நீங்கள் இன்றைய எமது காதல்
நீங்கள் இன்றைய எமது கல்வி
நீங்கள் இன்றைய எமது வியர்வை
நீங்கள் இன்றைய எமது வாழ்வு



படிப்பகம்

www.padippakam.com

இன்று நாம் பதித்த சுவடுகள் தானே
நாளைய உமது படுகையாய் நீள்வது
கனவும் கனிவும் அற்ற தலையாரிகள்
கண்களைப் பறித்த பின்னரும் கூட
எதிரியைத் தடுக்கும் காவல் அரணாய்
தம்மை நிறுத்திய
இன்றைய இளைஞரின் கனவே நீங்கள்
அந்த மாவீரரின் கனிகளே நீங்கள்
எது எம் நாடு
சுட்டெரித்த வெறும் மண் பாலையா
மக்களா சொல்க.....
பறவைகள் விலங்குகள்
பாம்புகள் மீன்கள்
கரைகள் காடுகள் கழிகள் தூய காற்று
செடி கொடி தாவரம் நாங்கள் என்று
கோக்கப்பட்டு
வடக்குக் கிழக்காய் நீள்கிற யாவும்
நம் தாய் நாடு
கோவில்கள் அடுத்த பள்ளிவாசல்கள்
சிலுவைகள் நிமிரும் தேவாலயங்களும்
வடக்குக் கிழக்கு மண்ணில் இருக்கிற
விகாரையும் சேர்ந்ததே என்தாய் நாடு
அம்பாறை வாழும் சிங்களக் குடிமகன்
ஈழமே எனது தாய் மண் என்று
நெஞ்சை நிமிர்த்தும் திருநாளன்றோ
என்தாய் மண்ணின் விடுதலைத் திருநாள்
நாளை நீங்கள்
தியாகிகளுடைய சமாதிகளிலே
அஞ்சலி செய்கையில்
நம் நந்த வனத்தில் தென்றல் முகமூடி அணிந்த புயல்கள்
தின்று தீர்த்த ஒளிவிளக்குகளையும்
நினைவு கூருங்கள்

யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகமான
மக்பூலுக்கு நெருப்பு வைத்தது
யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகமான
வணசிங்காவைக் கொழுத்திப் போட்டது
யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகமான
பிதா சந்திரா பெர்னாண்டோவை சாம்பராக்கியது
யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகமான
கந்தசாமியைக் கருக்கிப் போட்டது
யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகங்களான
சபாலிங்கத்தை பரிசில் அழித்தது
செல்வியைப் பிடித்து நீறாக்கியது
யார் ஐயாவோடு சில்வா தோழரை
வன்னியில் பிடித்து ரயரில் எரித்தது
பதவிப் போட்டியில் தம்தோழரைக் கொல்ல



படிப்பகம்

www.padippakam.com

யாழ்ப்பாணத்து வைத்தியசாலையை
கசாப்புக் கடையாய் மாற்றியவர் யார்
தாங்களும் தீவிர போராளிகளே
என நிரூபிக்க விஸ்வமடுவிலோர்
ஏழையைப் பிடித்து
உளவாளியெனக் கொன்று எரித்தவர் யார் முள் பூசாரிகள்
குருட்டு முள் பூசாரிகள்
உங்களுக்காக இன்னுமோர் விளக்கை
ஏற்றியே அணைந்த விளக்குகள் இவர்கள்

உங்களுக்காக பிஞ்சினை வளர்த்தே
உதிர்ந்த மலர்கள் இவர்கள்
இன்றைய தீர்ப்புகள் இப்படியாயிற்று
நாளையிந்த பேராற்றுப் படுகையில்
புதுவெள்ளமாகப் புரண்டிடவுள்ள
என்னரும் பேரரே
நாளை உங்கள் தீர்ப்பெதுவாகும்
முகத்தில் கரியைப் பூசி
சாக்கடைகளிலே வீசப்பட்ட
பொற்சிலைகளுக்கு
நாளை உங்கள் தீர்ப்பு எதுவாயிருக்கும்
காக்கா பொன் சூடி
பீடங்களிலே ஏறிக்குந்திய
சாணிச் சிலைகளுக்கு
உங்களின் தீர்ப்பு எதுவாயிருக்கும்

என்னரும் பேரே ர உங்கள் நாட்களில்
முட்கோவில்களின் அத்திவாரத்தையும்
பெயர்த்துப் போடுங்கள்
என்னரும் பேரரே உங்கள் நாட்களில்
பூக்களாகவும்
வண்ணத்துப் பூச்சிகளாகவும்
பறவைகளுடைய சங்கீதமாகவும்
உங்கள் உங்கள் கனவுகளாகவும்
நாங்களும் வாழுவோம்.



படிப்பகம்

www.padippakam.com



* 1992 டிசம்பரில் பாரிஸ் நகரில் நடத்தப்பட்ட 14 வது இலக்கிய சந்திப்பில் சபாலிங்கம் உரையாற்றிக் கொண்டிருக்கிறார்.



* 1993 நவம்பர் மாதம் ஜெர்மனி பிறீமன் நகரில் நடைபெற்ற 17 வது இலக்கிய சந்திப்பில் தனது மிகவும் நம்பிக்கைக்குரிய நீண்ட கால அரசியல் இலக்கிய நண்பனாகிய புஸ்பராஜாவுடன் சபாலிங்கம்.



படிப்பகம்

www.padippakam.com

# மௌனங்களும் எங்கள் கல்லறைகளும்

ஒரு கணம்
அதிர்ந்து நடுங்கி
நின்றதோரிடத்தே அசையாது
சார்சல்ஸ் நகரத்தின்
சரிந்த
வானக் கரையில் சூரியன்.

பெரிய தினமொன்றின்
பகற் பொழுதில்
நனைந்ததொரு
ஆசிய மனிதனின் இரத்தத்தால்
சார்ல்ஸ் நகரத்துக் கூரைகள்.

வெடிக்கவும்,
மனிதத்தின் கதை
முடிக்கவும் மட்டுமே தெரிந்த
எங்கள் தேசத்து
யந்திரங்களிலொன்று
அலைகளையும், மலைகளையும்
கண்டங்களையும் தாண்டி
வெடித்தது:
பிரித்தது
மனிதனொருவனை எம்மிடையிருந்து.

காலிழந்த காகமொன்றுகூட
கரைந்துதன் துயர்கொட்டாத
சூன்யமான சூழ்நிலைக்குள்
எங்களிடமிருந்தொரு மனிதன்
பறிமுதல் செய்யப்பட்டான்.

செத்துப்போன மனிதர்களின் பட்டியலை,
மனிதர்களின் பட்டியலை
இதுவரையெங்கள்
கண்ணீராலும்,
மௌன அஞ்சலிகளாலும்
அடக்கம் செய்தோம்.

எங்கள் மௌனங்களே
எங்கள் மரணங்களை
பெருக்கமடையச் செய்கின்றது.
எங்கள் மௌனங்களே
எங்கள் மரணங்களை
பெருக்கமடையச் செய்கின்றது.
எங்கள் மௌனங்களே..........
.......!

கல்லறைகள்.
கோடிப்புறங்களில்

கல்லறைகள் வெட்டுவோம்.
எங்கள் மௌனங்களை
போட்டதிற் புதைக்க.

எங்கள் மௌனங்களையெல்லாம்
கல்லறையுளிட்டுச் சாத்தியபின்
மனிதத்தின் மரணமும்
அமிழும் கல்லறையுள்.

இனியும்
மனிதர்களை நாங்கள் இழக்கோம்.
வெடிக்கும் குருட்டுத்
துவக்கென்று அச்சத்தால்
மௌனித் திருந்ததைக் களையும்போது

இனியும்
மனிதர்களை நாங்கள் இழக்கோம்.

-தமயந்தி
02.05.94



படிப்பகம்

www.padippakam.com

# கொலைக் கலாச்சாரத்தை முளையிலேயே கிள்ளியெறிவோம்

நாம் பிறந்த மண்ணில் சுதந்திரம் கேட்டதால் உற்றாரைப் பறிகொடுத்து, வீடிழந்து, நாடிழந்து அந்நிய மண்ணில் அடைக்கலம் புகுந்து அகதிகளாக வாழும் அன்பார்ந்த தமிழ் மக்களே,

திரு. சபாரத்தினம் சபாலிங்கம் எனப்படும் எமது ஆருயிர் நண்பன், தனது சொந்த வீட்டுக்குள்ளேயே மனைவி, மகன், உறவினர்கள் முன்னிலையில், பட்டப்பகலில் உதவி வேண்டும் என்கிற போர்வையில் உட்புகுந்த இரு கொலைகாரக் கும்பலினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான்.

யார் இந்த சபாலிங்கம் ? ஏன் இந்தப் படுகொலை ?
கொலைஞர்கள் யார் ? என்று தட்டிக் கேட்கப் போகிறோமா?
அல்லது நமக்கேன் வீண் வம்பு என வாய்மூடி மௌனித்திருப்போமா ?

1970 களிலே, மாணவப் பருவத்திலேயே மக்களைப் பற்றிச் சிந்தித்துத் தமிழ் மாணவர் பேரவையைக் கட்டியெழுப்பியவர்களில் இவனும் ஒருவன். ஆட்சியாளர்களுக்கு எதிராகப் பேசவே பயந்த அன்றைய நாட்களில் கிராமங்கள், பாடசாலைகள், காடுகள், குடியேற்றப் பண்ணைகள் தோறும் கால்நடையாகவும், சைக்கிளிலும் அலைந்து திரிந்து மாணவர்களை, இளைஞர்களை, தமிழ்மக்களை விடுதலைப் போருக்கென அணிதிரட்டியவன். அரசுப் பணியில் இருந்த போதும் அரசாங்கத்தின் அடக்குமுறைக்கெதிராகக் கிளர்ந்து எழுந்தவன். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்துக்கு அரிச்சுவடியைக் கற்றுத் தந்தவன். இதனால் சிறிலங்கா சிறைகளிலே பல வருடங்கள் சித்திரவதைகளை அனுபவித்தவன். சிறையிலிருந்து தப்பியோடும் முயற்சியிலே தனது இடுப்பையே முறித்துக் கொண்டவன். அரசு மறுபடி அவனுக்காக வலைவிரித்த போது எம்மைப் போல் அவனும் இந்த நாட்டில் வந்து தஞ்சம் புகுந்து அகதியானவன்.

அகதியான நிலையிலும் அவன் தனது நாட்டு மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமையை மறக்கவில்லை. இன்று திசைமாறி, இலக்கு இழந்து இன அழிவை வேகப்படுத்திக் கொண்டிருக்கும் ஈழவிடுதலைப் போராட்டம் விரைவில் சரியான திசையறிந்து உண்மையான இலக்கு



படிப்பகம்

www.padippakam.com

நோக்கி முன்னேறும் என்ற நம்பிக்கையுடனும், முன்னேற வேண்டும் என்ற வேட்கையுடனும் விடாமுயற்சியுடன் செயல்பட்டவன். அதற்கான பயணத்தில் சரி எது ? பிழை எது ? உண்மை என்ன ? பொய் என்ன ? நீதியா ? அநீதியா ? என்பவை மக்கள் மத்தியில் விவாதிக்கப்படல் வேண்டும் என்பதும், வருங்காலப் போராட்ட சந்ததிகளுக்காக அவைகள் யாவும் வரலாற்றுப் பதிவுகளாக அமைய வேண்டும் என்பதும் இவனது குறிக்கோளாக இருந்தது. அதேவேளை எமது உரிமைகளுக்காகப் போராடும் நாம் மனித உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்பதிலும் அவன் குறியாகவே இருந்தான். இவனது இந்த முயற்சியின் பயனாக இன்று ஒரு சிறந்த ஆவணக் காப்பகத்தையே எமக்கு உருவாக்கித் தந்து விட்டுச் சென்றுள்ளான் எமது இனிய நண்பன் சபாலிங்கம்.

சரியாகச் சிந்திக்கத் தெரியாத, உண்மையைக் காணப் பயந்த, நீதியைச் சந்திக்கத் திராணியற்ற படுகோழைகளே இந்தக் கொலைகாரக் கூட்டம். உண்மையை வெட்டிக் குழிதோண்டிப் புதைக்கும், நீதியைக் கழுத்தைத் திருகிக் கொல்லும் முயற்சியின் விளைவு தான் இந்தப் போராளி சபாலிங்கத்தின் பச்சைப்படுகொலை.

ஈழத்தில் 1980 ஆரம்பங்களில் இடம் பெற்று வந்த தனிமனித விருப்பு வெறுப்புக் கொலை களை மக்கள் நாம் கண்டும் காணாதவர்களாய் மௌனித்து இருந்ததனாலேயே ஈழப் போராட்டம் இன்றைய அழிவு நிலைக்குத் தள்ளப்பட்டது. அன்று மக்கள் நாம் தட்டிக் கேட்டிருந்தால் இன்று ஆயிரக் கணக்கில் எமதருமைப் புதல்வர்களை, நண்பர்களை, உறவினர்களை, கல்விமான்களை, திறமைசாலிகளை அநியாயமாக இழந்திருக்கமாட்டோம். அன்று நாமனைவரும் ஓரணி திரண்டு ஒற்றுமைக் குரல் எழுப்பியிருந்தால் இன்று எமது தாயக மண்ணில் முக்கால்வாசியைப் பறிகொடுத்துவிட்டு சொந்த ஊருக்குள்ளேயே மக்களை அகதி முகாம்களுக்குள் தவிக்க விட்டு விட்டு குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டிக் கொண்டிருக்க மாட்டோம். சொந்த மண்ணில் கொலைப்பயம் என்றே இந்த அந்நிய மண்ணில் அகதிகளா னோம். இங்கும் அந்தக் கொலைக்கரம் நீண்டால் மக்கள் நாம் இனி ஓடுவதெங்கே ?

மக்களின் உயிருக்கு உத்தரவாதம் கொடுத்து, அவர் தம் உரிமைக்கு மதிப்பளித்து, அவர்கள் உடமைகளை பாதுகாத்து, மக்கள் தாம் வாழ்ந்த பாரம்பரியப் பிரதேசங்களைத் தக்கவைத்து முன்னேறவேண்டிய ஈழப்போராட்டம் அதற்கு மாறாக இன்று, மக்களைப் பணயக் கைதிக ளாக ஆக்கி அனைத்தையும் இழக்கவைத்து, எந்நேரமும் எதுவும் நடக்கலாம், நாட்டைவிட்டு எப்படித் தப்பி ஓடலாம் என்ற மனோநிலைக்கு அவர்களைத் தள்ளி விட்டுள்ளது. எமது நாட்டில் இந்நிலை நீடிக்க இங்கிருக்கும் நாம் உடந்தையாக இருக்கக்கூடாது. எமது மண்ணின் இன்றைய பச்சைப் படுகொலைப் பண்பாடு இங்கேயும் தொடர அனுமதிக்க முடியாது.

இதனைச் சாதிக்கும் சக்தி மக்களாகிய உங்களிடமே உண்டு. மக்கள் சக்தி மாபெரும் சக்தி.
மக்கள் சேர்ந்தால் மலையையும் நகர்த்தலாம்.
மக்களே தூங்கியது போதும். இல்லையெனில்
இக்கொலைப்பட்டியல் தொடரவே செய்யும்.

மக்களே மௌனித்திருந்தது போதும். இல்லையெனில்
இங்கேயும் நாம் எம்மை எமது நண்பர்களை, எமது மக்களில் பலரை இழக்க வேண்டியேற் படும்.

எனக்கென்ன வந்தது என்ற மனோநிலை போதும். இல்லையெனில் இந்நாட்டு மக்களால் நாம் வெறுக்கப்பட்டு விரட்டப்படும் காலம் வெகு விரைவில் வரும்.

இப்போதே விழித்தெழுங்கள். இந்தப் படுகொலைக் கும்பலை இனம் காணுங்கள்.
கொலைக் கலாச்சாரத்தை வேரோடு பிடுங்கி எறியுங்கள்.
சிந்திப்போம். தீர்மானிப்போம் . செயற்படுவோம்.
ஒன்றுபடுவோம். ஒழுங்கமைப்போம். ஓரணிதிரள்வோம்.

**சபாலிங்கம் நண்பர்கள் வட்டம்.**
**பாரீஸ், பிரான்ஸ். 04.05.1994**



படிப்பகம்

www.padippakam.com



* பிரான்சுக்கு 1990 இல் வந்த உலகத் தமிழ் இளைஞர் பேரவை தலைவர் இரா. ஜனார்த்தனன் அவர்களுடன் திரு. சபாலிங்கம் திருமதி. கோமதி சபாலிங்கம்.



* 1994 ஏப்பிரலில் சுவிற்சலாந்தில் பேர்ண் நகரில் நடைபெற்ற 18 வது இலக்கிய சந்திப்பில் ஈழத்துக் கவிஞர் சேரனுடன் சபாலிங்கம்.



படிப்பகம்

www.padippakam.com

# மனித உரிமைவாதி சபாலிங்கம்

## ஆயுதக் கலாச்சாரத்தின் ஐரோப்பிய வருகை

அநாமதேய அரசியல் கொலைகளின் வரலாறு எமது தேசத்தையும் தாண்டி பாரிஸிலும் தனது தடங்களை கோரமாகப் பதித்துள்ளது. பாரிஸில் சபாலிங்கத்தின் படுகொலையால் மானிடம் மீண்டும் ஒரு முறை தலை குனிந்தது. கடந்த மே மாதம் முதலாம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் துப்பாக்கி சகிதம் அவரது வீட்டுக்குள் நுழைந்த இரண்டு இனம் தெரியாத தமிழ் இளைஞர்கள் அவரது மனைவி, குழந்தை முன்னால் சபாலிங்கம் மீது துப்பாக்கி வேட்டுக் களை தீர்த்த பின் தொலைபேசி மற்றும் சகல தொடர்புகளையும் நாசஞ் செய்து குடும்பத்தின ரையும் எச்சரித்து தப்பி ஓடி விட்டனர். அவரது மனைவியும் மகனும் இக்கோரக் கொலையை நேரில் கண்டு பேரதிர்ச்சிக்குள்ளானார்கள்.

சபாரட்ணம் சபாலிங்கம் பாரிஸில் வசிக்கும் ஒரு மனித உரிமையாளரும் புத்தக வெளியீட்டா ளருமாவார். வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 14.01.1952 இல் பிறந்தார். திருமணமான இவருக்கு ஒரு ஆண்குழந்தை உண்டு. இனிய சுபாவமும், உதவிசெய்யும் உள்ளமும் கொண்ட இந்த மனிதன் விருந்தினர் போல் வந்த இரு தமிழ் இளைஞர்களினால் கோழைத்தனமாக கொலை செய்யப்பட்டது ஏன் ?

தமிழ் மக்கள் மேல் திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைக்கெதிராக எழுந்த மாணவ பேரவையின் ஸ்தாபகர்களில் ஒருவர் தான் சபாலிங்கம். 1973 ம் ஆண்டில் அரசால் கைது செய்யப்பட்டு இரண்டு வருடங்களாக பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டார். சிறிலங்கா அரசின் சித்திரவதை தாங்காமல் நாலாம் மாடியில் இருந்து இவர் குதித்தபோதும் உயிர் பிழைத்தார். 1978 ம் ஆண்டில் பஸ்தியாம்பிள்ளை கொலை தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்ட சபாலிங்கம் மீண்டும் அரசினால் கைது செய்யப்பட்டு விடுதலையானார். திருமணமானபின் 1981 ஆம் ஆண்டு பாரிசுக்கு வந்தார். ஆனாலும் தமிழ் மக்களின் விடுதலையை நேசித்தார். 1985 ஆம் ஆண்டு வரை ரெலோ ஆதரவாளராக இருந்து செயல்பட்டார்.

இயக்கங்களின் ஜனநாயகமற்ற தன்மைகளும், குறுகிய பார்வையும், அரசியல் வறுமையும், ஆயுத மோகமும் சபாலிங்கம் போன்ற மனிதர்களுக்கு வெறுப்பையும், ஏமாற்றத்தையும் ஊட்டின. இதனால் இயக்கசார்பு அரசியலில் இருந்து தன்னை முழுமையாக விடுவித்துக் கொண்டார்.

ஆனாலும் இயக்க அராஜக அரசியலுக்கப்பாலும் மானிட விடுதலைக்கான அவசியமும் அதற்கான பணிகளும் இருப்பதாகவே நம்பினார்.

அரசின் அடக்கு முறைக்குமட்டுமல்லாமல் இயக்கங்களின் அராஜகத்திற்கும், ஆயுத கலாச்சாரத் திற்கும் தாக்குப் பிடிக்க முடியாத அவல நிலையில் ஈழத்தமிழக்ளில் ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக ஐரோப்பா மட்டுமல்ல உலகமெங்கும் சிதறினர். உண்பதற்கு மட்டுமே வாய்திறக்க அனுமதிக்கப்பட்ட சூழ்நிலையிலிருந்து வந்த பல கலைஞர்களுக்கும், அறிஞர்களுக்கும், இலக்கியவாதிகளுக்கும் புகலிடம் புதியதொரு களமாக அமைந்தது. போர்ப்பரணியும் புகழ்பாடலும் மட்டுமே இலக்கியமாக திணிக்கப்பட்ட ஒடுக்குமுறை சூழலிலிருந்து வெளியே வந்தவர்களின் மெய்யான சுதந்திரப் படைப்புகளாக புலம் பெயர்ந்த இலக்கியங்கள் எழுந்தன. மனிதநேயம், வாழ்வின் அவலம், வெளிநாட்டு சூழல், ஜனநாயகம் போன்ற பல்வேறு பரிமாணங்களில் கலை, கவிதை, இலக்கியங்கள் பிறந்தன. ஐரோப்பிய நிறவெறி, இயந்திர வாழ்க்கை, குலைந்துபோன குடும்பங்கள் என்ற அர்த்தமற்ற வாழ்க்கைக்குள் அழிந்துபோன பலருக்கு இந்தப் படைப்புகள் நம்பிக்கையைக் கொடுத்தன.

இந்தப் படைப்புகளின் அவசியம் பற்றி சபாலிங்கம் நன்கு உணர்ந்திருந்தார். இப்படைப்புகள் வெளிவருவதற்கான சகல ஆதரவுகளையும் தன்னால் முடிந்தவரை நல்கினார். ஈழம் கலைஞர் சமூகவிஞ்ஞானக்கழகத்தை (ASSEAY) நிறுவி அதனூடாக பல ஆக்கங்களை வெளிக் கொண்டுவந்தார். சேரனின் " எரிந்துகொண்டிருக்கும் நேரம்" சோலைக்கிளியின் " ஆணிவேர்



படிப்பகம்

www.padippakam.com

அறுந்த நான் " அருந்ததியின் " இரண்டாவது பிறப்பு" ஜெயபாலன் கவிதைகள் போன்ற கவிதைத் தொகுப்புகளையும் புத்தளம் "வரலாறும் மரபுகளும்" என்ற ஷாஜகானின் வரலாற்று நூலையும், சிவராமின் "The Eluding Peace" என்ற அரசியல் ஆய்வு நூலையும் பதிப்பித்து வெளியிட்டார். இலக்கிய சந்திப்புகள் நடத்துவதிலும் ஆர்வம் காட்டினார். மனித உரிமைக ளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் யாழ் நிறுவனம் தொடர்ந்து வெளியிட்டுவரும் அறிக்கைகளை பிரான்சில் பரவலாக விநியோகிப்பதிலும் முன்னின்றார். தமிழீழ விடுதலைப் போராட்ட நினைவுகள் பற்றி புஸ்பராஜா எழுதும் நூலை பதிப்பிப்பதற்கான முயற்சிகளில் இறுதிக் காலங்களில் ஈடுபட்டிருந்தார் என்பதையும் நாம் அறிகிறோம்.

சபாலிங்கம் தனக்கு சரியென்றுபட்டதை வெளிப்படையாக பேசினார். ஜனநாயகத்தின் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். ஒரு மனிதாபிமானி. ஆயுதக் கலாச்சாரத்தினை அடியோடு வெறுப்பவர். அதுமட்டுமல்ல சுதந்திரமான கருத்துக்கள் வெளியே கொண்டு வரப்படுவதன் அவசியத்தை உணர்ந்து அதற்காக செயல்பட்டவர்.

இந்த நிலைப்பாடு தான் இக்கொலையின் சூத்திரதாரிகளுக்கு இவர் மேல் ஆத்திரத்தை மூட்டியது. தாங்கள் ஆட்சி செய்யும் பகுதிகளில் சகல ஜனநாயகடக கதவுகளையும் மூடி, பேனாக்களுக்கு பூட்டுப்போட்டு ஆயுதப் பலத்தில் ஆட்சியைத் திணித்து அதை மக்களின் வாழ்க்கை முறையாகவும் மாற்றுவதில் வெற்றிகண்டவர்கள் அதே பாணியை ஐரோப்பாவிலும் நடைமுறைப்படுத்த முயலும் முதற்கட்டமே இது. சுயமான சிந்தனைக்கும், செயற்பாட்டிற்கும் களத்திலிருந்து வரும் எச்சரிக்கையே இது.

புதிய கருத்துக்களும் சிந்தனைகளும் தங்களது ஆதிக்கத்திற்கும் அதிகாரத்திற்கும் ஆபத்தைக் கொண்டு வரும் என்ற அச்சத்தில் மூழ்கி அந்தக் கருத்துக்களை சகித்துக் கொள்ள முடியாத பேடிகளே இவ்வாறான கோழைத்தனமான கொலைகளைச் செய்கிறார்கள். தனிமனிதனை அழிப்பதன்மூலம் கருத்துக்களை தடை செய்து விடலாம் என கனவு காண்கிறார்கள். சுந்தரம், மனோ மாஸ்டர், விமலேஸ்வரன், ராஜினி போன்ற அரிய மனிதர்கள் -சமுதாயத்தின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு உழைத்தோர் இவர்களின் கோழைத்தனத்திற்கு பலியானார்கள். இன்று சபாலிங்கம் ஆனாலும் அவர்களின் சிந்தனைகள் வாழ்ந்து கொண்டு தான் இருக்கும்.

அகதிகளை ஐரோப்பியர்கள் தங்களது நாடுகளில் பிரச்சனை ஏற்படுத்துபவர்கள் -கிரிமினல்கள் -காட்டுமிராண்டிகள் என சித்தரித்து வெளியேற்ற முனைகிறார்கள். இக்கால கட்டத்தில் இவ்வாறான கொலைகள் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதை ஐரோப்பிய அரசுகள் நியாயப்படுத்தவும், துரிதப்படுத்தவும் உதவும் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

அரசியல் வேறுபாடுகளை ஆயுதங்களால் தீர்ப்பதை கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததன் விளைவாகவும் தான் அகதி வாழ்க்கை வாழ நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். தற்பொழுது புகலிடங்களிலும் அவ்விஷச் சூழல் பரவ எத்தனிக்கிறது. சபாலிங்கத்தின் கொலையிலிருந்தா வது நாம் விழித்துக் கொண்டாக வேண்டும். இதனாலேயே எம்மை எதிர்கொண்டிருக்கும் பேராபத்திலிருந்து எம்மையும் எமது எதிர்கால சந்ததியையும் காப்பாற்றிக் கொள்ள முடியும். இதன் மூலமே அவரை நாம் நினைவு கூருவோம்.

தமிழ் மக்களே !
சபாலிங்கத்தின் கொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.
இங்குள்ள பிரான்ஸ் தூதரகத்திற்கு சபாலிங்கத்தை கொலை செய்தவர்களை கைது செய்வதில் துரிதம் காட்டுமாறு முறையீட்டுக் கடிதங்களை எழுதுவோம்.
சகல சமூக நிறுவனங்களும், சங்கங்களும் இந்தக் கொலைக்கெதிரான கண்டனங்களை வெளியிடுங்கள்.

எங்கள் தயக்கங்களும், அச்சங்களும் ஆயுதக் கலாச்சாரத்தை மேலும் பரவ விடுவதற்கு வழிவகுத்து விடும்.
நேற்று பாரிசில் நடந்தது இனி லண்டனிலோ, கனடாவிலோ, ஜெர்மனியிலோ நடக்கலாம்.
இதைத் தடுத்து நிறுத்த வேண்டியது நாங்கள் தான்.

**சபாலிங்கம் அஞ்சலிக் குழு - லண்டன்**
**04.05.1994**



படிப்பகம்

www.padippakam.com

# மாற்றுக் கருத்துக்களுக்கு படுகொலை தீர்வாகாது

விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரும் எழுபதுகளின் ஆரம்பத்தில் முனைப்புடன் இயங்கிய தமிழ் இளைஞர் பேரவை பேரணி அமைப்புக்களின் உந்து சக்திகளில் ஒருவரும் எழுத்தாளரும் வெளியீட்டாளருமான சபாரத்தினம் சபாலிங்கம் அவர்கள் பரிஸ் நகரில் அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

1994 மே மாதம் 01 ம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் துப்பாக்கிகளுடன் அவரது வீட்டுக் குள் நுழைந்த இரண்டு தமிழ் வாலிபர்கள் அவரது மனைவி குழந்தையின் முன்னிலையில் சபாலிங்கத்தின்மீது பல துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தபின் தொலைபேசி மற்றும் சகல தொடர்புகளையும் நாசம் செய்து குடும்பத்தினரையும் எச்சரித்து தலைமறைவாகி விட்டனர். 1970 களில் விடுதலைக்காக போராட்டத்தில் இறங்கி தமிழ் இளைஞர்களை " பயங்கரவாதிகள் " என்ற போர்வையில் சிறிலங்கா அரசு கைது செய்த வேளையில் சபாலிங்கம் பாலம் ஒன்றுக்கு குண்டு வைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறையிலிடப்பட்டார். மாடிச் சிறையிலிருந்து தப்பியோடும் போது நாரியில் முறிவேற்பட்டு ஐந்து வருடங்கள் சிறிலங்கா அரசின் தேடுதல் வேட்டைக்கு தலைமறைவாக வாழ்ந்த அவர் அதன் பின் பிரான்ஸ் வந்து சேர்ந்தார்.

புலம் பெயர்ந்து பாரிசில் வாழ்ந்து வந்த சபாலிங்கம் மனித நேயம் பேணும் ஒரு விடுதலைப் போராட்டத்தை நேசிப்பவராகவும் ஈழத்து கவிதை, இலக்கியங்களின் பதிப்பாளராகவும் இருந்து வந்தார். "ASSEAY" எனும் இடம்பெயர்ந்த தமிழர்களின் வெளியீட்டு நிறுவனத்தின் இயக்குன ராகவும் இருந்து சமகாலக் கவிஞர்களான வ. ஐ. ச. ஜெயபாலன், சேரன், அருந்ததி, செல்வம், சோலைக்கிளி ஆகிய கவிஞர்களின் கவிதைப் புத்தகங்களையும் தராக்கி (TARAKI) அவர்களின் " THE ELUDING PEACE " ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய பத்திரிகை எழுத்துக்களையும் வெளியிட்டுள்ளார். மேலும் " புத்தளம் முஸ்லிம் மக்கள் வரலாறு " இயக்க உட்படுகொலைக ளைச் சித்தரிக்கும் " புதியதோர் உலகம் " இலங்கையில் தடைசெய்யப்பட்ட 1958 கலவரத்தைப் பற்றிய தாச்சி வித்தாச்சி(Tarzi Vittachi) அவர்களின் " Emergency 58 " மற்றும் "யாழ்ப்பாண வைபவ மாலை" போன்ற நூல்கள் மீண்டும் வடிவம் பெற உழைத்திருக்கின்றார். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் அறிக்கைகளை பிரெஞ்சு மொழியில் வெளிக்கொணர்ந்ததுடன் புகலிடத்தில் தமிழர்களின் அரசியல் செயற்பா டுகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். மாற்றுக் கருத்துக்களையும் சிந்தனைகளையும் துப்பாக்கிக் குண்டுகள் மூலம் அழித்தொழித்து வருகின்ற இயக்கப் பாரம்பரியத்தில் மற்றெல் லோரையும் விட முன்னணியில் இருந்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளே சபாலிங்கம் அவர்களின் படுகொலைக்குப் பொறுப்பானவர்கள் என்று நாம் கருதுகின்றோம். பாரிஸ்நகரில் இருக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான லோறன்ஸ் திலகர் சபாலிங்கம் அவர்களின் படுகொலைக்கு தாங்கள் பொறுப்பல்ல என்று மறுத்திருந்த போதிலும் அதனை ஏற்றுக் கொள்வதில் எங்களுக்கு மிகுந்த சந்தேகம் உண்டு. அனுராதபுரம் சிங்கள மக்கள் படுகொலை, அமிர்தலிங்கம் யோகேஸ்வரன் ஆகியோரின் படுகொலை, கிழக்கு முஸ்லீம்க ளின் படுகொலை போன்ற பல சம்பவங்களுக்கு தாங்கள் பொறுப்பாளர்களல்ல என்று அறிக்கை விட்டு பின்னர் மெல்ல மெல்ல உரிமை கோருவதென்பது விடுதலைப் புலிகளின் வரலாற்றில் உள்ளார்ந்து காணக் கிடக்கின்றது. மாற்றுக் கருத்துள்ளவர்களை அழிப்பதென் பதை இலங்கையிலும் இந்தியாவிலும் மட்டுமே இதுவரை மேற்கொண்டிருந்தவர்கள் இன்று ஐரோப்பாவிலும் தமது படுகொலைகளை ஆரம்பித்திருப்பது சர்வதேச அரங்கில் விடுதலைப் போராட்டத்தின் நலன்களுக்கு மிகுந்த பாதகமாக அமையும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

விடுதலைப் போராட்ட நலன்களுக்கு மேலாக சொந்த இயக்க நலன்களை முதன்மைப் படுத்துவது ஒட்டுமொத்தமாக தமிழ் பேசும் மக்கள் எல்லா வகையான சுதந்திரத்தையும் புதைகுழியில் தள்ளுவதாகும். இது மிகவும் வன்மையாக கண்டிக்கப்படவேண்டியது மட்டுமல் லாது வெறுக்கப்பட வேண்டியதுமாகும்.

விடுதலைப் போராட்டத்தையும் மானிட விழுமியங்களையும் நேசித்து இரண்டையும் இணைத்து இயங்கி வந்த ராஜினி திராணகம போன்ற புத்திஜீவிகளின் படுகொலையின் வரிசையிலேயே



படிப்பகம்

www.padippakam.com

இன்று சபாலிங்கம் அவர்களின் படுகொலையும் நிகழ்ந்துள்ளது. ராஜினி, சபாலிங்கம் போன்றோர்கள் தனி மனிதர்களாக இயங்கி வந்த போதும் அவர்களுடைய கருத்துக்களுக்கும் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்புகளுக்கும் சர்வதேச அளவில் கிடைத்து வந்த அங்கீகாரமே கொலையாளர்களை பீதியுறப் பண்ணியுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ஆவணங்கள் பேணப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருந்த சபாலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தின் பழைய வரலாற்றைக் கூறும் " யாழ்ப்பாண வைபவ மாலை " என்னும் நூலின் புதிய பதிப்பொன்றை வெளியிட்டிருந்தார். தமிழ் பேசும் மக்கள் தொடர்பான தொல்லியல் ஆவணங்களையும் வரலாற்று நூல்களையும் தொடர்ந்து வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார். எழுபதுகளிலிருந்து இன்று வரையான விடுதலைப் போராட்ட வரலாற்றை தகவல்களுடனும் வாக்கு மூலங்களுடனும் புகைப்படங்களுடனும் ஆவணப்படுத்தும் பெரும் முயற்சியின் இறுதிக்கட்டத்தில் சபாலிங்கம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டமை பலத்த சந்தேகத்தினை எழுப்புகின்றது. கடந்த காலப் போராட்டத்தில் மறுக்கப்பட்ட மறைக்கப்பட்ட பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்து விடும் என கொலையாளிகள் அச்சமுற்றிருந்தனர்.
இத்தகைய படுகொலைகளுக்கு எதிராக உலகமெங்கும் குரல் எழுப்பப்பட வேண்டும் என்பது மிகவும் குறைந்த பட்சத்தேவையாகும். எதிர்காலத்தில் இவ்வாறான படுகொலைகளை தடுத்து நிறுத்துவதற்காக தீவிரமாக உழைப்பதே விடுதலையை நேசிக்கும் ஒவ்வொருவரதும் கடமையாக இருக்க வேண்டும்.

மாற்றுக் கருத்துக்களை துப்பாக்கிக் குண்டுகளால் அழித்து விடலாம் என்று நம்புபவர்கள் வரலாற்றுக் குருடர்கள் மட்டுமே ஆவர். சபாலிங்கம் அவர்களின் பணியை இன்னும் ஒரு படி மேலெடுத்துச் செல்ல உழைப்பதே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

இப்பிரசுரத்தை பின்வரும் சஞ்சிகைகளும், பொது ஸ்தாபனங்களும் ஒன்றுசேர்ந்து வெளியிடுகின்றன.

**சஞ்சிகைகள் - மனிதம் (சுவிஸ்), சமர் (பிரான்ஸ்)**
**சிந்தனை (ஜேர்மனி), தேனீ (ஜேர்மனி)**
**சுவடுகள் (நோர்வே), தூண்டில் (ஜேர்மனி)**
**தாயகம் (கனடா), தேடல் (கனடா)**
**காலம் (கனடா), பொதிகை (லண்டன்)**
**நான்காவது பரிமாணம் (கனடா), தாகம் (லண்டன்)**
**சுமைகள் (நோர்வே), ஊதா (ஜேர்மனி)**
**ஈழபூமி (லண்டன்)**
**- பொது ஸ்தாபனங்கள்**
**மனித உரிமைக்கான இலங்கையர் (ஜேர்மனி)**
**C.D.S.L கனடா**
**GRENZENLOS (INTER CULTUREL MEDIAS POINT)**
**SOUTH SOLIDARITY COMMITTEE**
**விழிப்பு**
**கிரியாகுரல்**
**06.05.1994**



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு தேசத்தின் தற்கொலை இதுவென அறியார்!

"நாமே நமக்குப் பகையென ஆனோம்
நம்மை நாமே அழித்திட உறுதி
பூண்டனம்........................."
- *சி. சிவசேகரம்.*

திரு. சபாரத்தினம் சபாலிங்கம் எம்மிடமிருந்து பலாத்காரமாகப் பிரிக்கப்பட்டு விட்டார். அவரது நினைவுகள் எமது நெஞ்சங்களில் பசுமையாக நிழலாடிக் கொண்டிருக்கின்றன. இவ்வளவு தூரம் நெஞ்சை அழுத்தும் நினைவுகளை மனிதர்கள் மனதில் விட்டுச் செல்லக் கூடிய தாக்கமுள்ள ஒரு மனிதனாக, எழுத்தாளனாக, அறிஞனாக, விமர்சகனாக, பண்பாளனாக எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு மனிதாபிமானமிக்க மனிதனாக அவர் வாழ்க்கை அமைந்திருந்தது. தமது வாழ் நாட்களை தமது சமூகத்திற்காக உழைப்பதிலேயே கழித்த ஒரு மனிதனை நாம் இன்று இழந்து விட்டோம்.

சிங்கள பேரினவாத அரசின் ஒடுக்கு முறைக்கு எதிராக போராட்டங்களை ஆரம்பித்த துடிப்புள்ள இளைஞர் முகாமில் இவர் முன்னணியில் நின்றார். இலங்கை அரசின் பேரினவாத சிறைகளில் அடைபட்டு, வதைபட்டு, நாரி எலும்பு உடைபட்டு விடுதலைப் போரில் புடம்போடப்பட்டார் பின்பு பிரான்ஸ் தேசம் வந்து சேர்ந்தார். இலங்கையில் தமிழர்கள் படும் அவலத்தை சர்வதேச சமூகத்திற்கும், ஐரோப்பியத் தமிழர்களுக்கும் தெரியப் படுத்த வேண்டும் என்ற இவரின் வாஞ்சையின் வெளிப்பாடாக ஒத்த கருத்துக் கொண்ட பாரீஸ் வாழ் தமிழர்களை ஒன்றிணைத்து " பிரான்சு தமிழீழப் பேரவை" ஸ்தாபிக்கப்பட்டது. பேரவையின் வெளியீடாக " தமிழ் முரசு " வெளி வந்தது. பேரவையில் கருத்து வித்தியாசங்கள் வந்த காலங்களில் ஜனநாயகப் பண்பினை மதித்துக் காப்பாற்றினார். ஆனால் தமிழ் இயக்க அரசியலில் உருவாகிய சில பண்புகள் இவரை அவற்றிலிருந்து ஒதுங்கிக் கொள்ளச் செய்தன. ஆனால் அவரின் செயற்பாடுகள் ஓயவில்லை. "ஈழம் கலைகள் சமூக விஞ்ஞானக்கழகம்"(ASS-EAY) என்ற அமைப்பை உருவாக்கினார். சமகாலக் கவிஞர்களின் கவிதைத் தொகுதிகளை வெளியிட்டதுடன், பல பிரபல எழுத்தாளர்களின் நூல்களை மறு பிரசுரம் செய்தார். புலம் பெயர்ந்த கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் சஞ்சிகைகளையும் ஊக்குவித்ததோடு, அவர்களை நேரடியாகச் சந்தித்தும், கலந்துரையாடியும் ஒரு பரந்த கருத்துப் பரிமாறலுக்கு உதவினார்.

ஒரு கர்மவீரனின் வரலாற்றை சில வார்த்தைகளினால் விளக்கவோ, எடைபோடவோ முடியாது. வருங்கால வரலாறே அதற்கான மதிப்பைக் கொடுக்கும்.

திரு. சபாலிங்கமும் எமது வரலாற்றில் ஒரு பகுதிதான். ஈழப் போராட்டத்தினையும் அதன் தன்மைகளையும் உள்ளும் புறமும் அறிந்திருந்த திரு. சபாலிங்கம் அதன் வரலாற்றை வருங்கால சந்ததிக்கு விட்டுச் செல்ல வேண்டியது தமது கடமை என்பதையும் உணர்ந்திருந் தார். இதற்கான ஆவணங்களையும் புத்தகங்களையும் வாங்கிச் சேகரித்தார். அவரின் வசிப்பிடம் ஒரு ஆவணக் காப்பகமாகவும், ஒரு வெளியீட்டகமாகவும் திகழ்ந்தது. எமது வரலாற்றில் பழமைக்கும் புதுமைக்கும் இடையிலான பாலமாக, நடமாடும் வரலாற்றுக் களஞ்சியமாக புலம் பெயர்ந்த சூழலில் அவர் விளங்கினார். அந்தப்பாலம், அந்தக் களஞ்சியம் எம்மிடம் இன்று இல்லை.

எம்மிடம் இருப்பவற்றை நாமே இல்லாமற் செய்து கொண்டிருக்கின்றோம். அன்று எமது நூலகம் எரிக்கப்பட்டபோது, வள்ளுவனும், ஔவையும், பாரதியும் நகரில் அடித்து நொருக்கப் பட்டபோது....... பொங்கினோம், பொருமினோம். இன்று எமது நூலகத்திற்கும், எமது அச்சகத்திற்கும் நாமே தீ வைத்துக் கொழுத்துகின்றோம். எமது சமகால வள்ளுவனையும், பாரதியையும் மக்களுக்கு அறிமுகம் செய்தவனை நாமே அழித்து விட்டோம். இதுதான் எம்மிடம் குடிவந்து விட்ட தற்கொலைக் கலாச்சாரமா?



படிப்பகம்

நமது இனம், தமிழினம் தனது சமீப கால வரலாற்றில் தன்னை அணுவணுவாக அழிக்கத் தொடங்கி விட்டது. உலகம் அசுர வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் பொழுது, நாம் பின் நோக்கி அடி மேல் அடி வைத்து கற்காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். நாகரிக உலகம் ஜனநாயகம், மனிதத்துவம் என்னும் பண்புகளை வளர்க்க முயற்சிக்கும் பொழுது, அந்தப் பண்புகளை வாழ்முறையாகக் கொள்ளும் பொழுது, நாம் ஒரு கொலைக் கலாச்சாரத்தின் மூலம் நமது இனத்தை, நமது மனிதப் பண்புகளை, நாகரீகமடைந்த மக்களுடன் வாழக் கூடிய தகுதிகளை அழித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. சபாலிங்கத்தின் முடிவு ஒரு மனிதனின் கொலை அல்ல. எமது சமூகம், தன்னை அழிக்கச் செய்து கொண்டிருக்கும் தற்கொலை. இது ஒரு மனிதனையோ அல்லது சிலரையோ பாதிக்கும் முடிவல்ல. ஒரு சமூகத்தின், ஒரு இனத்தின் அழிவின் அறிகுறி.

ஒரு மனிதன் தனக்கென வாழாது தனது சமூகத்திற்காக, தனது இனத்திற்காக வாழ முனைந்த ஒரு மனிதனின் கோரமுடிவுக்காக நாம் கண்ணீர் வடிக்கின்றோம். மனித விழுமியங்களை இழந்து கொண்டிருக்கும் எமது சமூகத்திற்காகவும் நாம் இந்தச் சமயத்தில் கண்ணீர் வடிக்கின்றோம்.

திரு. சபாலிங்கத்தின் மனைவி, மகன் மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

- "சிந்தனை" ஆசிரியர் குழு.

www.padippakam.com

# ஈழப்போராட்ட முன்னோடி சபாலிங்கம்

இதுவரை காலமும் எழுத்துக்கும் இன்னொரு அரசியல் நிலைப்பாட்டுக்கும் எதிராக இலங்கையில் அரசியற் படுகொலைகளை நடத்திய அதே முகங்கள் அமிர்த.லிங்கம், யோகேஸ்வரன், ராஜனி திராணகம என்று தொடரும் முடிவில்லாத வரிசையில் பாரிசில் சபாலிங்கத்தையும் தங்கள் வெறிக்கு இரையாக்கியுள்ளனர். மே மாதம் முதலாம் திகதி பிற்பகல் 1 மணியளவில் துப்பாக்கி சகிதம் அவரது வீட்டுக்கள் நுழைந்த இரண்டு தமிழர்கள் மனைவி குழந்தை முன்னால் சபாலிங்கத்தின் மீது பல துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த பின் தொலைபேசி மற்றும் சகல தொடர்புகளையும் நாசஞ் செய்து குடும்பத்தினரையும் எச்சரித்துத் தலைமறைவாகி விட்டனர்.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான சபாலிங்கம் ( 14.01.1952 -01.05.1994 ) இன்று எஞ்சியிருந்த ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராவார்.
1970 களில் பயங்கரவாதிகள் என்ற போர்வையில் சிறிலங்கா இனவாத அரசு விடுதலையை முன்னெடுத்த தமிழ் இளைஞர்களை கைது செய்த வேளையில் சபாலிங்கம் பாலமொன்றுக்கு குண்டு வைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு வருடங்கள் ( 1973 -1975 ) சிறையில் இடப்பட்டார். மாடிச்சிறையில் இருந்து தப்பி ஓடும்போது நாரியில் முறிவேற்பட்டு ஐந்து வருடங்கள் சிறிலங்கா அரசின் தேடுதல் வேட்டைக்குத் தலைமறைவாக ஈழத்தில் வாழ்ந்து அதன் பின்னர் பிரான்ஸ் வந்து சேர்ந்தார்.

தமிழ்ச் சமூகத்தின் கடந்த கால ஈழப்போராட்டமாயினும் சரி இன்றைய இடம்பெயர்ந்த தமிழர் வாழ்வாயினும் சரி அனைத்தினதும் ஆவணப்படுத்தலின் தேவையை உணர்ந்து கொண்ட சபாலிங்கம் நிகழ்வுகளை தன்னால் முடிந்த அளவு கோவைப்படுத்தி வந்திருக்கின்றார்.

ஆசியா (ASSEAY ஈழம் கலைகள் சமூகவிஞ்ஞானக்கழகம்) எனும் இடம்பெயர்ந்த தமிழர்களின்வெளியீட்டு நிறுவனத்தின் இயக்குனராகவிருந்து சமகாலக் கவிஞர்களான ஜெயபாலன், சேரன், அருந்ததி, செல்வம், சோலைக்கிளி ஆகிய கவிஞர்களின் கவிதைகளையும் தராக்கி அவர்களின் ஈழவிடுதலைப்போராட்டம் பற்றிய பத்தி எழுத்துக்களை " The Eluding Peace " எனும் பெயரிலும் வெளியிட்டுள்ளார். மேலும் " புத்தளம் வரலாறும் மரபுகளும் "என்கின்றநூல் வெளிவர உதவியும் மற்றும் இயக்க உட்படுகொலைகளைச் சித்தரிக்கும் " புதியதோர் உலகம் ", 1958 இல் தமிழர்கள் மீதான படுகொலையை கண்டித்து தார்சி வித்தாச்சி அவர்கள் எழுதிய இலங்கையில் தடைசெய்யப்பட்ட "Emergency 58 ", யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் வரலாறு போன்ற நூல்களை மறுபிரசுரம் செய்துமுள்ளார். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் அறிக்கைகளை பிரெஞ்சு மொழியில் வெளிக்கொணர்ந்ததுடன் புகலிடத்தில் தமிழர்களின் அரசியல் இலக்கியச் செயற்பாடுகளில் தன்னை முடிந்தவரை ஈடுபடுத்திக் கொண்டார்.

தனிமனிதப் படுகொலைகளாலேயே ஈழவிடுதலைப் போராட்டம் சர்வதேசமெங்கும் நலிந்து கொண்டிருக்கும் இந்த வேளையில் சபாலிங்கத்தைப் படுகொலை செய்தமை ஈழத்தில் தமிழர்கள்மேல் நடாத்தப்படும் கொடூரமான தாக்குதல்களை அகில உலக ரீதியில் வெளிப்படுத்துவது மேலும் சிக்கலாக்கி உள்ளது. இக்கொலையில் தாங்கள் இலாபமடையக்கூடும் என்று நினைப்போர் அரசியலை என்னவென்பது ? ஈழத்தில் மட்டுமன்றி இன்று ஐரோப்பாவிலும் கூட தமிழரை அச்சுறுத்தும் இக் காட்டுமிராண்டித்தனமான கொலை, மாற்றுக் கருத்துக்களை செவிமடுக்கும் தாற்பரியம் தமிழர்களிடமிருந்து எட்ட எட்டப் போவதை மீண்டும் எமக்குக் காட்டி நிற்கின்றது.

சிறு பொறிகளைக்கூட கண்டு அஞ்சும் கோழைகளே
கொலைகளை நிறுத்துங்கள் !
மௌனங்கள் பேசும் நாளொன்று தோன்றும் !

சபாலிங்கம் அஞ்சலிக்குழு நண்பர்கள்
ஜேர்மனி. 03.05.1994



படிப்பகம்

www.padippakam.com



* ஈழத்தமிழர்களுக்காக பாரிஸ் வீதிகளில் நடாத்தப்பட்ட ஊர்வலங்களில் ஒன்றில் தனது மகன் சேயோனைத் தூக்கிக்கொண்டு வரும் சபாலிங்கம். ஊர்வலத்தின் முற்பகுதியின் நடுவில் திருமதி சபாலிங்கத்தைக் காணலாம்.

## சபாலிங்கம் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டார்!

சி ங்களச் சிறையின்
கொடுமை நாங்காது கண்
டிச்சிறைச்சாலையில் 3 வது
மாடியிலிருந்து கீழே குதித்து
காயமடைந்த தமிழ் இளைஞ
ரான திரு. சபாலிங்கத்துக்கு
யாழ்ப்பாணத்தில் வைத்துச்
சிகிச்சை அளிக்கப்பட்டு வந்
தது தெரிந்ததே.

பிரதமர் யாழ்ப்பாணம்
செல்லும்போது — இந்த
இளைஞர் யாழ்ப்பாணத்திலி
நப்பது "பாதுகாப்புக்கு"
ஆபத்து என்று சி. ஐ. டி.
யினர் கருதி அவர் பூரண
குணமடைவதற்குமுன்னரே
யாழ்ப்பாணத்திலிருந்து அவ
சரமவசரமாக விமானத்தில்
கொழும்புக்கு மீண்டும்
கொண்டுவரப்பட்டு, வெலிக்
கடைச்சிறை ஆஸ்பத்திரி
யில் வைக்கப்பட்டுள்ளா
ராம்!

திரு. சி. புஷ்பராசா த
போது வெலிக்கடை
சிறைச்சாலையில் வைக்க
பட்டுள்ளார்!

### நடேசானந்தம்

...துக்கடைச் சிறைச்
...ரிமாண்ட்டில் வை
...டிருந்த மட்டக்கள
...போறை மாவட்ட
...இளைஞர் பேரவைச்
...திரு. பூ. நடேச
...இப்போது தடுப்ப
...தே சிறையில்
...வைக்கப்பட்டுள்
...அண்மையில் ெ
...மன்றத்துக்கு
...அணிவகுப்புக்
...வரப்பட்டே
...கூட்டணித்
...வரான
...மு

சுதந்திரன்
29.9.74

### புஷ்பராசா

சி. ஐ. டி. யினர
ய்யப்பட்ட
...வை



படிப்பகம்

# எரியும் உன் சிதை வெளிச்சம் தரட்டும்!

நண்பா!
நம் வாயிலிருந்து வருகின்ற
ஒவ்வொரு உண்மைக்கும்
ஒவ்வொரு துப்பாக்கிக்குண்டு
பரிசாகக் கிடைக்கும்
காலம் ஒன்று வருமோ ?

அன்புடன் நண்பனுக்கு:
எப்படி எழுதுவது ? எங்ஙனம் தொடர்வது. எழுதும் நிலையிலா நாங்கள் உள்ளோம். மண்ணையும் மக்களையும் நேசித்தவர்களில் மரணித்துப் போனவர்கள் வரிசையில் இன்று நீயும். நீ கால் பதித்த பாரிஸ் தெருக்களில் நாம். வெறுமை. எங்கும் எதிலும். உன் நினைவுகளும் கனவுகளுமே எங்களிடம் மிஞ்சியுள்ளது. உன் மரணத்தை ஜீரணிக்க தோல்வியுற்ற மனிதர்களாய் நாங்கள். நண்பா நேற்றைய அந்தக் காலங்கள் எங்கள் நினைவுகளில் பசுமையாய்..........

கட்டுப்பெத்த தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் முதன்முதலாய் நீ. அதுவரை காலமும் தமிழ் மாணவர்களின் இலக்கியத் தேடலுக்கு எவ்வித வழியுமற்று மூடப்பட்டிருந்த கதவுகளை நீளத் திறந்தாய். உருவாயிற்று " காவலன் " எனும் தமிழ் இலக்கிய சஞ்சிகை. அதன் உருவாக்கத்தில் நீ எடுத்துக் கொண்ட முயற்சிகளும் காட்டிய ஆர்வமும். நண்பா உன் இலக்கியத் தேடலின் முன் நாங்கள் சிறு துரும்பு. எனினும் உன் இலக்கியக் கனவுகள் வடிவங்களாய் உருப்பெறும். துயரம் கொள்ளாதே.

1970 ம் ஆண்டுக் காலமது. ஞாபகம் கொள்வாய் நண்பா. நீயும் உனது தோழர்களும் தமிழ் மாணவர் பேரவையை உருவாக்கி மாணவர் நலம் பேணவும், எம் உரிமை பெற்றிடவும் அரசின் இனவாத கொடூரங்களுக்கெதிராய் கிளர்ந்தெழுந்த அன்றைய கால உன் நினைவுகள் எங்களிடம். உன் சுறுசுறுப்பும் , வழிகாட்டலும் தமிழ் இளைஞர் பேரவையின் உருவாக்கத் திற்கு துணை நின்ற காலமது. இவ்வரலாற்றினை, வரலாறுகளையும் வரலாற்றாசிரியர்களையும் புதைகுழி தோண்டிப் புதைக்கும் கொலைவெறி பிடித்த கயவர் கூட்டம் எங்ஙனம் அறிய முடியும். நண்பா; மரணம் என்பது வாழ்வின் முடிவல்ல. மரணத்திற்கு அப்பாலும் உன்னைப் போன்றவர்களுக்கப் வாழ்வு உண்டு. அவ் வாழ்வின் ஆரம்பம் இன்று. கவலை கொள்ளாதே. உன் வாழ்வின் லட்சியங்கள் நிச்சயம் உயிர்பெறும். துப்பாக்கி மிருகங்களின் வெறித்தனம் உன் உயிரைக் கொன்றது. ஆனால் உன் நெஞ்சத்துக் கனவுகள் கனமானவை. உறுதி கொண் டவை. கவலை கொள்ளாதே. அமைதி கொள்.

1973 ம் ஆண்டும் எங்கள் நினைவுகளில்....... உன் வாழ்வில் ஓர் துயரமான காலமது. அரசின் பாரிய வேட்டைக்குப்பின் நீ சிறைவைக்கப்பட்டாய். மூன்றாண்டு கால சித்திரவதை. எனினும் உன் தப்பி ஓடும் முயற்சி. அன்றைய காலங்களில் எங்களுக்கு மலைப்பான செய்தி இது. நாரிமுறிவோடு ஐந்தாண்டு தலைமறைவு வாழ்வும் போராட்ட நெறிகொண்ட காலமது. அரசின் கொடூரமான தேடலுக்கு உயிர்தப்பி உன் ஐரோப்பா புகலிடப் பயணம், நேற்றைய நிகழ்வுகளாய் இன்று எங்களிடம்........

உன் புகலிட தரிப்பிடம் பாரிஸ் ஆயிற்று. எங்கள் பயணம் இங்காயிற்று. தரிப்பிடத்தில் நீ. மீண்டும் மலைக்கின்றோம். எத்தனை செயற்பாடுகள். தலைவணங்குகின்றோம் நண்பா. புகலிட வாழ்விலும் உன் போராட்ட நேசிப்பும் தாயக உணர்வையும் அறிவோம் நண்பா. ஈழத்தில் " துப்பாக்கி கலாச்சாரத்தையே " தமிழரின் கலாச்சாரப் பணியாக்கிட முயலும் வெறித்தன முட்டாள் கூட்டத்தின் செயற்பாடுகளுக்கு அப்பால் தமிழரின் உன்னதமான கலாச்சார செல்வங்கள் அழிந்திடாமல் காக்கவும், அதை வளர்க்கவும் நீ எடுத்துக்கொண்ட முயற்சிகள், செயல்கள் அறிவுச் சூனியங்களினால் எப்படி ஜீரணித்துக் கொள்ள முடியும் ?

www.padippakam.com

நண்பா அறிவு என்பது வெறியர்களின் அகராதியில் அகற்றப்பட்ட சொல்லாயிற்றே. நண்பா " ஆசியா " ஆய்வு நிறுவனம் மூலம் நீ வெளிக்கொணர்ந்த சமூக பொருளாதார ஆய்வு நூல்கள், கலை இலக்கியப் படைப்புகள், எதிர்கால செயற்திட்டங்கள் அனைத்தும் இவ் அறிவுச் சூனியங்களுக்கு கசப்பான விடயங்களே. நண்பா; இறுதிக் காலத்தில் தமிழர் வாழ்வியல் தொடர்பாகவும், கடந்த கால போராட்ட நெறிமுறை தொடர்பாகவும் வரலாறு களை ஆவணப்படுத்தும் பெரு முயற்சியில் செயல்கொண்டாய். இந்நேரத்தில் உன் கொலை, கொலைவெறியர்களின் நோக்கத்தின் மேல் எங்களுக்குப் பலத்த சந்தேகத்தினை கொடுக்கின் றது நண்பா. கடந்த காலப் போராட்டத்தில் இவர்களால் இழைக்கப்பட்ட கொலைகளும், துரோகத்தனங்களும், மறைக்கப்பட்ட உண்மைகளும் வெளிச்சத்திற்கு வெளிக்கொணரப்பட்டு விடுமோ என்று துப்பாக்கி மிருகங்கள் அஞ்சின போலும். நண்பா;இவர்களின் வெறித்தன கொலைகளினால் உண்மைகள் என்றும் உறங்கிடப் போவதில்லை. நண்பா; கொலைகளின் மூலம் துரோகங்களை மூடி மறைப்பதுதானே இவர்களின் இயக்கச் சித்தாந்தம். கொலைகாரர் களின் எதிர்பார்ப்பு வெறுமை கொள்ளட்டும்.

யாழ்ப்பாண நூல் நிலையம் எரிக்கப்பட்டு ஈழத்தமிழரின் வரலாற்று ஆவணங்கள் அழிக்கப் பட்ட நிகழ்வை எண்ணி அதனை குறைந்த பட்சமாவது ஈடுசெய்ய வேண்டும் என்ற துடிப் போடு நீ சேகரித்து வைத்த நூல்களும், பெறுமதி மிக்க ஆவணக் காப்பகமும் உன் நினைவுகளை என்றும் இயம்பும்.

மக்களின் உண்மையான விடுதலையை நேசிப்பவர்களையும், புத்திஜீவிகளையும், கொன்றொ ழிப்பதையே தமது வெறித்தன கொலைகள் மூலம் ஈழத்தில் பறை சாற்றிய முட்டாள் கூட்டம் இப்பொழுது தமிழர்களின் புகலிட வாழ்விலும் தமது கைவரிசையைக் காட்டிட முனைந்து நிற்பதை நாம் எவ்வகையில் ஏற்றுக்கொள்வது நண்பா?

நேற்று உன் கதவு தட்டப்பட்டது.
நாளை எங்கள் கதவும் தட்டப்படும்.
இதை நாம் உணராத பட்சத்தில் புகலிடவாழ்வும் " துணுக்காய் கொலைக்களமாய் -வதைமு காமாய் " ஆகும் நிலை வெகுதூரத்தில் இல்லை என்பதை உணர்கின்றோம் நண்பா.

**புகலிட வாழ்விலும் துப்பாக்கி மிருகங்களினால்**
**சுதந்திரம் இழந்து தவிக்கும் உன் நண்பர்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

# பாவ ஜென்ம பூமி

-சிவதாசன்

இரத்தம் மீண்டும் பிரவாகம் எடுக்கின்றது ! தமிழர் கால்பட்ட இடமெல்லாம் களிகங்களாக வேண்டும் என்று நியதி போலிருக்கின்றது.

இரத்தக் களரிகளைக் கண்டு சலிப்படைந்த மக்களும் அரசுகளும் சமாதானம் தேடி ஓடுகின் றார்கள். பொறுத்தவர்களெல்லாம் பூமியாள்கிறார்கள் நமக்கு மட்டும் நிணவாடை நீங்கிப் போவதாய் இல்லை.

நிகழவே முடியாதென்றிருந்ததெல்லாம் நிகழ்ந்து கொண்டிருக்கிற காலம். மூன்று நூற்றாண் டுகளுக்கு பிறகு தென்னாபிரிக்காவில் சரித்திரம் படைக்கப்படுகிறது. அரை நூற்றாண்டுக்குப் பிறகு பாலஸ்தீனம் சுயநிர்ணயம் பெறுகின்றது. கத்தி கோடரிகளெல்லாம் சத்தியத்தின் காலடியில் சங்கமமாகிக் கொண்டிருக்கிறது. தமிழர் வாழிடங்களில் மட்டும் சத்தியம் செத்துக் கொண்டிருக்கிறது.

மண்டேலா எதிரியாயினும் உயிருடன் சிறை வைக்கப்பட்டிருந்தவர். எதிரிகள் அவரை எப்போதோ முடித்திருக்கலாம். செய்யவில்லை.

இஸ்ரேல் நினைத்திருந்தால் அரபாத்தை அரபுக்காரர்களைக் கொண்டே அறுவடை செய்திருக் கலாம் செய்யவில்லை.

கொலைகள் செய்வது சுலபம். உயிர்கள் உலகில் மிச்சம் மிச்சம். ஆடு, மாடு, கோழி என்று எந்த உயிரையும் எப்போதும் கொல்லலாம். கேட்பாரில்லை. மனித உயிர்கள் அப்படியில்லை. யார் உயிரை எடுக்கவும் யாருக்கும் தகுதியில்லை. அதுவே தான் மனித சட்டம்.

மனித கொலைகள் மனதை உலுப்பும். எந்த உயிரும் விரும்பிப் பிரிவதில்லை. பரம்பொருளு டன் இன்புற்றிருப்பதைவிட பந்துகளுடன் வாழ்ந்து மடிவதைத் தான் எல்லா உயிர்களுமே விரும்பும். கொலைக்களத்திற்கு கொண்டுபோகும் போது விலங்குகள் கூட ஏக்கத்துடன் பார்க்கின்றனவாம். அப்படியிருக்க ஆறறிவு படைத்த மனிதன் மனம் கொலையாளி முன் எப்படி இறைஞ்சும் ?

அப்படியிருந்தும் கொல்கிறார்கள். வெட்டிக் கொல்கிறார்கள். சுட்டுக் கொல்கின்றார்கள். எரித்துக் கொல்கின்றார்கள்.

இந்தக் கொலையாளிகளின் மனம் எப்படியானதாய் இருக்கும் ? கொலைகளைப் புரிந்த பின்னரும் இவர்களால் எப்படி நிம்மதியாக வாழ முடிகின்றது ?

யாராலுமே புரிந்து கொள்ள முடியாத உணர்வு !
வியட்நாம் போரிலும் வளைகுடாப் போரிலும் ஈடுபட்ட அமெரிக்க படையினரில் பெரும் பகுதியினர் சித்த சுவாதீனமற்று போய்விட்டார்கள். வேதனைகளை இவர்களால் உணர்ந்து கொள்வது போல் வேறு எவர்களாலும் உணர்ந்து கொண்டிருக்க முடியாது. அதனாற்தான் இந்த வேதனைகளைக் காணாத, கேட்காத, உணராத அரசியல் தலைவர்களினால் நிம்மதி யாக உறங்கிக் கொள்ள முடிகின்றது. இந்த அரசியல் வாதிகளின் உடுக்குகளுக்கெல்லாம் தாண்டவமாடும் பாமர மக்கள் இக்கொலைகள் எல்லாம் நியாயங்கள் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் வீடுகளில் கொலைகள் நடைபெறாத வரைக்கும் அவற்றிற்கு நியாயம் கற்பிக்கும் இவர்களும் ஒரு வகையில் கொலையாளிகளே. வளைகுடா போரின் முன்னர் ஜோர்ஜ் புஷ்க்கு ஆசீர்வாதம் கொடுத்த கிரேக்க மத பிரசாரகரும் சரி, யாழ்ப்பாணத் தில் இயக்க கொலைகளின் பின்னர் கொக்கோ கோலா கொடுத்து மகிழ்ந்த பெருமக்களும் சரி, கொலையாளிகளின் வர்க்கமே தான்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்றால் என்ன? இந்திய இராணுவம் கொன்றால் என்ன? இயக்கங்கள் கொன்றால் என்ன ? எல்லாமே கொலைகள் தான். கொலையுண்டவர்கள் விரும்பப் பட்டவர்களாயின் தியாகிகள். விரும்பப்படாதவர்களாயின் துரோகிகள். இதை அப்படியே திருப்பித் திருப்பிச் சொல்ல தெரிந்து கொண்ட எம்மக்களும் பெரிய கொலையாளிகள் தான்.

எல்லாளனின் சிதை புதைத்த இடத்தைக் கடக்கும்போது தகுந்த மரியாதை கொடுத்துச் செல்லுமாம் கைமுனுவின் படைகள். எதிரியின் சிதைக்கு கொடுக்கும் மரியாதை கூட சிங்களவருக்குத் தான் இருக்க முடியும் போலிருக்கின்றது. அல்லாவிட்டால் பாரிஸில் கொலையுண்ட சபாலிங்கத்தைப் பற்றி அவ்வளவு அவதூறாக எழுத தமிழரால் தான் முடியும் என்று இரு -கண்ட ஈழநாடு நிரூபித்திருக்குமா ? கேவலம் இந்த மனங்களுக்குள் மனிதமேயில்லை !!!.

சபாலிங்கம் மட்டுமல்ல எந்தவொரு கொலைகளுமே அவசியமானதல்ல. சபாலிங்கத்தினால் எந்த உயிருக்குத்தான் ஆபத்து வந்து விடப் போகின்றது ?. அல்லது சபாலிங்கத்தின் கொலையை நியாயப் படுத்துவதால் ஈழம் விடுதலை பெற்று விடப் போவதில்லை.

சபாலிங்கம் ஒரு தனி மரம். அவர் தோப்பாக இருக்கவும் இல்லை. இருந்து விடப் போவதுமில்லை. எவர்களின் இருத்தலையும் அச்சுறுத்தும் நிலையிலும் அவர் இருந்திருக்கவில்லை. அப்படி இருந்தும் அந்த தனிமரம் சாய்க்கப்பட்டு விட்டது. இரண்டு அப்பாவி உயிர்களின் நிழலைப் பறிப்பதில் அவ்வளவு அவசரம்.

மண்டேலாவை உயிரோடு விட்டு வைக்க ஒரு பிற இனத்தவனுக்கு முடியுமாயிருந்தது. இன்னுமொரு கண்டத்திலிருந்த இலக்கியவாதி சபாலிங்கத்தை விட்டு வைக்க அவரது சகோதரர்களால் முடியவில்லை.

**தாயகம்**



படிப்பகம்

www.padippakam.com

# ASSASSINATION OF S.SABALINGAM IN PARIS ON 1 MAY 1994

**SABARATNAM SABALINGAM**, who has been living with his family in Paris for the last several years, was shot at point-blank range and killed in the presence of his wife and child in their own home by two gunmen, known to be Tamils, on 1 May 1994.

Born on 14 January 1952 in Velanani in the Jaffna peninsula in northern Sri Lanka, **SABALINGAM** had been a pioneer of the Tamil liberation struggle. He spent some three years in Sri Lankan jails for his active participation in the 1970s in struggles against State repression of Tamils. He came to France in 1981 to avoid further persecution. He was a well known writer, publisher of Tamil literary works, human rights activist and a documentalist, besides working in an organisation assisting Tamil refugees with their problems.

**SABALINGAM**'s assassins had gained entry into his residence under false pretences - having telephoned him and seeking his assistance and an appointment to discuss some of their personal problems. The gunmen arrived at about 2.30 pm on 1 May 1994, rang the door bell, and the unsuspecting family members allowed them into the house. The two who arrived were Tamils and spoke Tamil. Within two minutes of their arrival, one of them pulled out a gun and shot at **SABALINGAM** several times - one bullet pierced through his forehead killing him almost instantly. The two killers wrenched off the telephone wires, threatened the terror-stricken family members not to shout and escaped.

While there have been many politically motivated acts of violence among Tamils in some western countries, **SABALINGAM**'s brutal assassination is the first one of its type - a well planned premeditated murder carried out by persons trained and deployed to physically eliminate the likes of **SABALINGAM** who think and act independently - carried out in a western country. Similar acts of assassinations have occurred among Tamils in Sri Lanka and India over the years, but the killing of **SABALINGAM** in Paris sets a new and dangerous trend.

We condemn the brutal assassination of **SABALINGAM** as an act of unmitigated terrorism. It is a dangerous and sinister development threatening the safety and security of all Sri Lankans, particularly Tamils, living in European countries who wish to exercise their basic right to free expression. There is no doubt that the murder of **SABALINGAM** was ordered not only to physically eliminate him, but also to serve as an example and a warning to other independent persons within the expatriate Tamil community.

We call upon all those concerned with basic human and democratic rights to join us in denouncing the assassination of **SABALINGAM** and similar politically motivated acts of individual terrorism.

We call upon the French Authorities to vigorously pursue the investigation into the killing of **SABALINGAM** and to bring the culprits to justice.

We also alert the British Government to the prospect of this dangerous spectre of political violence and assassinations visiting independent minded Tamils living in the UK and to their deeply felt concern and fear in this respect, and earnestly urge that the authorities do take such preventive and precautionary steps as are necessary to avoid such crimes being committed against defenceless persons living in the UK.

**Issued By the COMMITTEE AGAINST POLITICAL KILLINGS**

P.O.Box 3186
London E17 6TJ
9 May 1994



படிப்பகம்

www.padippakam.com



* 1980 களில் கொக்குவிலில் உள்ள தனது வீட்டில் தனது அன்புத்தாயாருடன் ஐஸ்பழம் சாப்பிடும் சபாலிங்கம்.

* 1984இல் பிரான்சுக்கு வந்த வரதராஜனுடன் (வட கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள்).



முன்னாள் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரனும், சபா லிங்கமும் சென்னைக் கடற்கரையில் 1984 ஆம் ஆண்டு ஈழத் தமிழர்களுக்காக நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தின் போது எடுத்துக்கொண்ட படம்.





படிப்பகம்

www.padippakam.com

# எல்லையற்ற காலம்

-சுகன்

### பாத்திரம் 1:

எனக்கெண்டா இந்தத் தமிழீழம் எண்ட வார்த்தை எட்டாத எங்காலும் ஒரு கிராமத்தில் போய் நிம்மதியா இருந்துவிட வேணும்போல கிடக்கு.

தமிழ் மக்களை எல்லாம் நேசிக்க வேணும் எண்ட விருப்பம் ஒண்டும் இப்ப இல்லாததாலை, சுய நிர்ணய உரிமை பற்றி நீங்கள் சொல்லிற ஒண்டும் எனக்கு இப்ப பிரச்சனை இல்லை.

### பாத்திரம் 2:

அவங்கள் குடுக்க முதல் உவங்களே குடுத்து விடுவாங்கள் போலை கிடக்கு. அடுத்தது அனேகமாக நீங்கள்தான் எண்டு பயமுறுத்திக்கொண்டிருக்கிறது எரிச்சலா இருக்கு.

### பாத்திரம் 3:

ஒரு பயத்துக்குப் பின்னாலை வாற தீவிர உணர்வோ, இல்லை; ஏதாவது ஒரு பக்கத் தாலை எப்படியும் உடைச்சுக்கொண்டு பாயவேணும் எண்டுற நிர்ப்பந்தமோ இப்ப நடக்குது எண்டு உங்களிலை யாருக்காவது காணமுடியுதா? ஆனா இந்த அறை முந்தின மாதிரி இல்லை எண்டது மட்டும் எல்லாருக்கும் தெரியுமெண்டு நினைக்கிறன். ஆரும் கதைக்க முதல் எதையும் தாங்கள் கதைச்சுவிடக் கூடாதெண்டதிலை மட்டும் நாங்கள் வலு கவனமாக இருக்கிறோம்.

### பாத்திரம் 4:

நேற்று வெளியாலை இருந்து ரெலிபோன் ஒண்டு வந்திது. 'என்னை உங்கை கொலையள் எல்லாம் நடக்குது, பேசாமல் விட்டுவிட்டு இருக்கிறியள்' எண்டு.

"முதல் செத்த ஆள் பஞ்சமியிலை செத்ததாம். அது தன்னோட சேர்த்து கொஞ்சப் பேரைக்கொண்டு போகும் எண்டதாலைப் பேசாமை விட்டுவிட்டு இருக்கிறம்" எண்டேன். வேறை என்னத்தைச் சொல்கிறது. மனிசி ஓடிவந்து "என்ன இந்தாள் மடக்கதை கதைக்குது" எண்டுது.

### பாத்திரம் 5:

எல்லாம் எப்பவோ முடிஞ்சு போன மாதிரித்தான் எனக்குக் கிடக்கு. முதல் கிடாய்க்கும் கடைசிக் கிடாய்க்குமான வேள்விக் காலத்திலை தலைக் கிடாய் விழுந்து விட்டுது. அது எப்படி நடந்திது, அதுக்குப் பிறகு நடந்தது எண்டு எல்லாத்திலையும் பங்கு கொண்டிருக்கிறோம். பட்டு அனுபவிச்சிருக்கிறம். இப்ப எங்கண்ட அன்றாட இயக்கத்திலை ஒவ்வொரு கணமும் எங்களை அறியாமல் நாங்கள் மாறுறம்.

எனக்கு விருப்பம் கடைசிக் கிடாய் வரைக்கும் இருந்து பார்க்கிறது. ஒவ்வொரு கொலையும் எப்படி எங்களுக்குள்ளை பாதிப்பை ஏற்படுத்தியிருக்குது எண்டு மிஞ்சி இருப்பவை அனுபவித்து உணர்கிறது மட்டும்தான் இனிச் சாத்தியம்.

### பாத்திரம் 6:

என்னமாதிரி வந்து கொண்டு போட்டுப் போனாங்கள், கடையிலை சாமான் வாங்கிற மாதிரி, அல்லது ஒரு போட்டோக் கொப்பி எடுக்கிற மாதிரி ஆகிப் போச்சு இங்கை இது.

அந்த முன்னாலை இருக்கிற பார்க்கிலை விளையாடிக்கொண்டிருந்த குழந்தையளையோ அல்லது இந்த வசந்தகால மரங்களையோ வெட்டிவிடப்பட்ட அழகான பசுந்தரையையோ பார்க்காமை எப்படி நேரை வீட்டுக்குள்ளை வந்தாங்கள். மிசின் புல்லு வெட்டிறதை நிண்டு பார்க்க எந்த மனிசனுக்குத்தான் விருப்பமிராது?

கீழ்வீட்டுக்காரருக்கு சத்தம் கேட்கும், அதுகளை நெடுகிலும் தொந்தரவு செய்யக்கூடாதெண்டு நாங்கள் பிள்ளைகளை வெருட்டிற இடத்திலை இப்பதான் தான் என்னை அகதி எண்டு உணருகிறேன்.

### பாத்திரம் 7:

பிரச்சனை "கருணை மனு" எழுதுறதா இல்லையா எண்டிறது மட்டும்தான். எழுதினா நாங்கள் இருக்கிறம் எண்டதை அது காட்டிக் கொடுத்துவிடும், இல்லையெண்டா எழுதாத குற்றத்துக்குள்ளை அடங்குவோம்.

### இடைவேளை

இதென்ன வாழ்க்கை  
அறையுக்கை, குளிக்கிறது  
அறையுக்கை, சப்பாத்து  
அறையுக்கை, பூங்கண்டு  
அறையுக்கை, ரீ.வி.  
அறையுக்கை, குடை  
அறையுக்கை, புத்தகம்  
அறையுக்கை, ஆக்கள்  
என்ரை காலம் எப்பவோ நிண்டு போச்சு.

### கட்டியக்காரன் வருகை:

கட்டியக்காரனும் வந்தான்  
– ஓய்யாரமாக  
கட்டியக்காரனும் வந்தான்  
– கையில் துவக்கும் கொண்டு  
கட்டியக்காரனும் வந்தான்.

தரு: மகா(கெட்ட) ஜனங்களே!

நடந்து கொண்டிருக்கும் எல்லா அநியாயங்களுக்கும் நீங்கள்தான் காரணமும் மூலமுமாக கருதப் படும்போது நீங்கள் 'எந்த நாய் எந்தக் கதவாலை போனாலென்ன' எண்டு *Habitation Tax*ம், *Alocation Familiale* ம் ஆக அவதிப்படுவதை எங்கள் மகாராஜா அறியார். அவர் இளவரசனுக்கும் இஞ்சினியருக்கும் உள்ள உறவு பற்றிய கவலையில் இருக்கிறார்.

'எகிப்திலே பிரேதக் குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டு வந்தீர்'.

யாத்திராகமம் – 14:11



படிப்பகம்

www.padippakam.com

# சொல்வதிலிருந்து...

*.....Sabaratnam Sabalingam, a pioneer of the Tamil liberation struggle, strong and renowned Tamil writer and publisher was brutally killled on May 1, 1994 in his own home in Paris, France where he was editing a book on the history of the Tamil Liberation Struggle.....*

**THE SUNDAY TIMES**
29.05.1994

*.....To those who are unaware of the persons and personalities involved in the Eelam Resistance, at its formative stage, Sabalingam was just another Sri Lankan Tamil living in exile. Very few, when the news of his cowardly assasination broke, were aware that he was one of the co-founders of the Tamil Student Federation, in the early 70s and later the Eelam Liberation Movement, in the mid 70s.....*
**TAMIL GUARDIAN.**

*.....LEADING Tamil exile and former TELO member Sabaratnam Sabalingam was shot dead in his Paris flat on 1 May. Sabalingam,a publisher and interpreter was working on a history of the Tamil militant movements.....*
**SRI LANKA MONITOR**
MAY 1994.

*......A founder of the publishing institution, ASIA, Sabalingam was responsible for the publication, among others, of works ofcontemporary Tamil poets like V.I.S Jeyapalan, Cheran, Arunthathy, Selvam and Cholaikili, the re - publication of "The History of the Muslims of Puttalam", " Puthiyathor Ulagam", "Yaalpana Vaipava Malai", " Eluding Peace" containing articles by Taraki in the Sunday Island, and "Emergency 58" containing the story of the anti - Tamil riots of 1958 by Tarzie Vittachi. He has also been responsible for translation and distribution of the reports by the university Teachers for Human Rights (Jaffna). At the time of his murder, Sabalingam is reported to have been, in collaboration with another Tamil writer, involved in a project of writing the history of the Tamil Liberation struggle....*
**TAMIL TIMES**
15 May 1994

....ஈழபோராட்ட வரலாற்றில் எத்தனையோ பேர் இன்று இல்லாமல் போய் விட்டனர். அவற்றினை நினைக்கையில் எமது போராட்டத்தில் சரியான பார்வையும், சித்தாந்தமும் இல்லாமல் ஆயுதத்தை கையிலேந்தியதன் விளைவே இது என்பது தெளிவாகிறது. இதனைப்பற்றி ஆழமாகக் கற்பது அவசியம். எவ்வாறாயினும் இன்றைய நிலையில் வரலாற்றில் முக்கிய பாத்திரம் வகித்தவர்களின் வாழ்வைப் பாதுகாப்பதும், பாதுகாத்துக்கொள்வதும் அவசியம். சில போராளிகள் அமைதியான சூழ்நிலை ஏற்படும்போது எதிரிகளை குறைத்து மதிப்பிடுவது வழக்கம். அதனால் எதிரியின் கை பலமாகிறது. அவ்வாறான சம்பவங்களில் ஒன்றே தோழர் சபாலிங்கத்தின் மறைவும்.....

- பொ. முத்துலிங்கம்
கட்டுரையாளர், தினகரன் வாரமலர்.

...சபாலிங்கத்தின் மறைவு தமிழ் இலக்கிய உலகிற்கேற்பட்ட இழப்பாகும். எனது ஆழ்ந்த துயரத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.....

- க. சச்சிதானந்தன்
"காந்தளகம்", சென்னை.



படிப்பகம்

www.padippakam.com

# சொல்வதிலிருந்து...

*....The foul assassination of S.Sabalingam at No.3 Allee Paul Leautaud, Sarcelles, a quiet middle class neighbbourhood in Paris on May day is the first Tamil political murder in the west. And as such it has deeply perturbed the Tamil expatriate community in Europe and Canada. It has also no doubt added to the worries of many Tamils in Europe who are faced with the threat of forced and imminent repatriation, and who have always felt despite the occasional unruliness on the part of newly arrived youth that the best way to make their stay in those climes permanent and profitable was to impress upon their host governments that they were a hardworking and peaceful lot. But with the dastardly murder of Sabalingam it is only too clear that the bloody business of Eelam politics will permit them no peace of mind even in those distant climes where they have sought refuge. The Sabalingam I knew was a peaceful man. He helped refugees with their paper work, was an avid collector of books on Sri Lanka, and did whatever was possible in his own small way to encourage writers and poets here and abroad.....*

*...Another member of this group was Pushparajah; who like Perumal later joined the EPRLF and was its representative in France for many years. He was closely associated with Sabalingam's recent work which has led many people who are in a curry to provide information to claim that Sabalingam was a member of the EPRLF.*

**by: Taraki**
**The Island International**
**11.05.1994.**

11.05.95

காலத்தால் அழிக்க முடியாதவாறு அமரர். திரு. சபாலிங்கம் அவர்களின் உழைப்பு என்றும் விடுதலையை நேசிக்கும் தமிழ் மக்களின் மனதில் உறுதியுடன் பதிந்திருக்கும்.

அமரர். திரு. சபாலிங்கம் அவர்களின் பணியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல எமது உழைப்பினையும் ஒத்துழைப்பினையும் என்றும் வழங்குவோம்.

தாங்க முடியாத இழப்பினை சுமந்து நிற்கும் உங்கள் துயரத்தில் நாமும் பங்கேற்கிறோம்.

கோணேஸ்வரன்
இணைப்பாளர்
தமிழர் வகைதுறை வளநிலையம்.

நட்புடன் கோமதிக்கு !

நண்பர் சபாலிங்கம் படுகொலை செய்யப்பட்ட செய்தி அறிந்தோம். தமது சொந்தக்கருத்தை துணிந்து கூறியதனால் துப்பாக்கிக் குண்டுகளால் பலர் மௌனிக்கப்பட்ட இன்றைய யாழ்ப்பாணத்து பயங்கர நிலைமை புகலிடமாகிய ஐரோப்பாவிலும் பரவியது எங்களுக்கு அதிர்ச்சியைத் தந்தது. இது போன்ற கொலைகளுக்குப் பின்னர் பாதிக்கப்படுபவர்கள் பெண்களும் பிள்ளைகளுமே! துப்பாக்கி வெறியர்களுக்குமுன் மௌனித்து முடங்கி விடாது உங்கள் பாதையைத் துணிந்து தொடர எமது ஆதரவுகள்.

நட்புடன்..
பெண்கள் சந்திப்பு 11
21.05.94
DUISBURG

*....The coldblooded murder of Sabaratnam Sabalingam, in broad daylight in his Paris residence on May Day by suspected LTTE militants, has shocked Tamils world over, especially the expatriate community in Europe.....*

**THE HINDU**
**May 12,1994.**



படிப்பகம்

www.padippakam.com

*"I do not agree with a word of what you say, but
I 'll defend to the death your right to say it"*

*- Voltaire*



*"நீ சொல்லுகிற கருத்துடன் எனக்கு உடன்பாடில்லை. ஆனாலும்
அதைச் சொல்வதற்கான உனது உரிமையைப் பாதுகாப்பதற்காக,
எனது உயிரையும் கொடுத்துப் போராடத் தயார்."*

*- வோல்த்தயர்*

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்